உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசுஹூ சித்திரைமீ [பகுதி-௬.

கம்பர் காலம்.

மேலுரைத்த கம்பரது வரலாற்றால் அவரது காலம் இஃதாகுமென ஒருவாறு ஆராய்ந்துகொள்ளலாகும். ஆயினும் அதனைப் பலருந் தெளியுமாறு வெளிப்படவைத்து விளக்கி ஈண்டுச் சில கூறுவேன். கம்பர் வரலாற்றால், அவர் சடையற் குயிர்த்துணைவர் எனவும் ஓரங்கலுருத்திரனாற் சிறப்பிக்கப்பட்டனரெனவும் தெரிதலோடு சடையவள்ளலுக்குச் சங்கரன் தந்தையெனவும் * ஒட்டக்கூத்தர் அச்சங்கரனுக்கு முதலில் உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும் தெளிதலுமாயிற்று. சங்கரசோழனுலா வுடையார்,

"கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனுந்—தெள்ளித்தன்
முன்னாய கரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னாயிரஞ் சொரிந்த பூபதியும்"

என வுரைத்ததனாற், கூத்தர், விக்கிரமசோழன் முதலாக மூவர்சோழரைப்பாடினரென் றறியப்படுதலின், அவர் அச்சோழர் மூவர் காலத்தவ ரென்பது நன்கறிந்தது. அச்சோழர்மூவரும், விக்கிரமனும் அவன்மகன் குலோத்துங்கனும், அக்குலோத்துங்கன் மகன் இராசராசனும் ஆவரென்பது அக்கூத்தர் பாடிய மூன்றுலாக்களாலுந் தெளிந்தது. இவ்வுண்மை 'கூத்தருங் குலோத்துங்கன்கோவையும்' என்னும் ஆராய்ச்சியினும் நன்குதெளிவிக்கப்பட்டதாம்(செந்தமிழ்,

* செந்தமிழ், தொகுதி-௩, பக்கம்-௬.

தொகுதி ௩. பக்கம் க௬௪) புராதனசாசன ஆராய்ச்சியுடையார் பலரும் விக்கிரமன் கி. பி. ஆண்டு 1118 முதல் 1132 வரைக்கும், குலோத்துங்கன் கி. பி. 1132 முதல் 1162 வரைக்கும்,இராசராசன் கி. பி. 1162 முதல் 1200க்கு மேற் சிலவாண்டுகள் வரைக்கும் அரசாண்டார்களெனக்கூறுவர். இதனாற் கம்பருக் குயிர்த்துணைவனான சடையவள்ளலுடைய தந்தையாகியசங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்து கொண்டிருந்த ஒட்டக்கூத்தர், கி. பி. 1118-க்கும் கி. பி. 1200 க்கும் இடைப்பட்ட காலத்தே பெயர்சிறந்திருந்தவரென்று கொள்ளலாகும். விக்கிரமன் அரசாட்சிக்காலம் 14 ஆண்டேயாகக், கூத்தர் அக்காலத்தே புலமை நிரம்பினராகி அவனை உலாவாற் பாடினரென்பதனால், அவர் அவ்விக்கிரமன் ஆட்சி யெய்தற்கு முன்னே பிறந்தவராதல் தெள்ளிதாம். கூத்தர், விக்கிரமன் முதலாக மூன்றுதலைமுறையரசர் காலத்தவராதலால் அவர் விக்கிரமன் அரசாட்சியினிறுதிக்காலத்தேதான் புலமைநிரம்பினராகி, அவனை உலாவாற் பாடினராவர் எனக் கூறுதலாகும். விக்கிரமனாட்சி 1132-க்கு மேற் படாமையால், கூத்தர் உலாப்பாடிய அவனாட்சியின் இறுதிக்காலம் 1130-க்கும் பிற்பட்டிருத்தல் பொருந்தாதாம். கூத்தர் விக்கிரமனை உலாப்பாடும்போது அவருக்கு வயது இருபதிற் குறைந்திரா தென வைத்துக்கொள்ளலாகும். விக்கிரமசோழன் கூத்தருக்கு முதன் முதல் பரிசில்பல நல்கிச் சிறப்புச் செய்தபோது அவர் 'இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன் றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களந், திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன் றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன" என்பதனாற் றம்வறுமைப்பட்ட நிலையை எடுத்துரைத்தலின், அக்காலம், குடும்பவருத்தம் நெஞ்சிற் றேற்றி அதனைத்தீர்த்தற்கு அவர் உழன்றதோர் பெரும்பிராயகாலமாகுமென்றும் ஊகித்தல் கூடும். தமிழ் நாவலர் சரிதைக்கண் *'நடித்தது நச்சரவு' என்னுஞ் செய்யுட்டலைப்பில் "சரசுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தமுதலியார் அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரமசோழன் கேட்டு ஒரு கவியை ஒட்டச்சொல்லென்று சொன்னபோது பாடியது" எனவமைந்திருத்தலால், கூத்தருக்குக் கவிதையுண்டாகிய காலம் விக்கிரம

* செந்தமிழ், தொகுதி-உ, பக்கம்-௩க௮.

சோழன் ஆட்சிக்காலமேயென்பது அறியப்படும். கூத்தர் குலோத்துங்கன் ஆட்சிக்காலமாகிய முப்பதியாண்டையும் கடந்து இராசராசனது நெடிதாட்சிக்காலத்தின் முற்பகுதியின் பெரும்பாகத்தும் இருந்தாராவரென்று அறியப்படுதலால், அவர் விக்கிரமன் காலத்திற் கவிதையுண்டானவராகி அவனை உலாவாற்பாடியபோது, அதிகவயதாயினராகக் கொள்ளுதற்கும் இயையாதாம். இவற்றாற் கூத்தர் விக்கிரமனுலாப்பாடியபோது இருபது பிராயத்தினரெனவும் அது விக்கிரமன் இறுதியாட்சிக்காலமாகிய கி. பி. 1130-க்கு அடுத்ததாமெனவும் கொள்ளின், கூத்தர் பிறந்த காலம் கி. பி. 1110 எனக் கூறலாம்.

சடையவள்ளலுடைய தந்தையாகிய சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்து கொண்டிருந்த கூத்தர் கி. பி. 1110-ஆம் ஆண்டினை அடுத்துப் பிறந்தவரானல், கூத்தனை அத்தொழிற்கு அமைத்துக் கொண்ட சங்கரன் கூத்தரின் மிகமூத்தோனவனென்று ஊகித்தலாகும். கூத்தர் சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்தது அவருக்குக் கவிதையுண்டாதற்கு முன்னேயாம். அக்காலம் கூத்தருடைய இளமைக்காலமாகத்துணியப்படும். அன்றியும் கூத்தர் விக்கிரமனுலாவின்கண் அச்சோழனிருமருங்கும் 'மந்திரிகள் படைத்தலைவர், சிற்றரசர், பெருங்காணியாளர் எனப்பலர் மொய்த்தீண்ட உலாப்போந்தான்' எனக் கூறுமிடத்து விக்கிரமன் தந்தையாகிய அபயன் காலத்தே கலிங்கம் வென்று கொண்ட கருணாகரத்தொண்டைமான் முதலிய பலருடன்,

"	...	...	...	மோட்டரணக்
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திரிகர்த்தனும்"

என்பதனால் திரிகர்த்தனைக் கூறுதலின், விக்கிரமசோழன் காலத்தே திரிகர்த்தனாகிய சடையன் சிறந்திருந்தனன் என்பது தெளியப்படும். சங்கரன் மகனை வெண்ணைச்சடையனையே திரிகர்த்தன் என்பர் என்பது * 'இராமரோடும் பாமாலை சூடும் குலமுடையானை ....வெண்ணைத்திரி கர்த்தனையே' எனவும் †"பாரிலுள்ளோர்

* † 'செந்தமிழ்' தொகுதி-ரு, பக்கம்-ம.

கண்ணுக வாழும் வெண்ணைத்திரிகர்த்தன்' எனவும் மேல்வரலாற்று ளெடுத்துக்காட்டிய மேற்கோள்களால் நன்கறிந்தது. விக்கிரம சோழனதிருமருங்கும் மொய்த்தீண்டிய இப்பலர் வரிசையில்,

" ... ... மட்டையெழக்
காதித் திருநாடர் கட்டாணங் கட்டழித்த
சேதித் திருநாடர் செல்வனும்"

என்பதனுற் சேதிராயனும் கூறப்பட்டுளான். சேதிராயன் என்பான் சடையனுடனிருந்து கம்பருடைய ஏரெழுபதினைக் கேட்டவன் என்பதும் அவன் அவ்வரங்கேற்றத்திடையே பாம்பாற் கடியுண்டு, பின்னர்க்கம்பருடையதெய்வவாக்கால் உயிர்ப்பிக்கப்பட்டான் என்பதும் முன்னை வரலாற்றுற் றெரிந்தனவாம். (செந்தமிழ்த் தொகுதி ரு, பக்கம்-எ) இச்சேதிராயன் காலத்தே திரிகர்த்தன் எனப்பட்டான் சடையனல்லாமல் வேறில்லாமையால் விக்கிரமசோழ னுலாவிற் கூறப்பட்ட திரிகர்த்தன் சடையனே யாவனெனத் தெளிந்துகொள்க. இதனுற் கம்பர்பால் ஏரெழுபது கேட்ட சடையனும் சேதிராயனும், கூத்தர் விக்கிரமனையுலாவாற்பாடும்போதே சிறப்புற்றிருந்தனராதல் அறியலாகும். இவ்விக்கிரமனுலாவிற் கூத்தர் சங்கரனைக் கூருமற் சடையனையே கூறுதலால், அவர் விக்கிரமன்மே லுலாப்பாடும்போது சங்கரன் இறந்தனன் எனவும் சடையனே அக்குடியிற் தலை சிறந்தனன் எனவும் கொள்ளலாம். கூத்தருண்டைய இளமைக்காலத்தே அவரை உதவித்தொழிற்கு அமைத்துக்கொண்ட சங்கரன், அவர் புலமை யெய்தி விக்கிரமனைப்பாடியபோது இல்லையாயினுன் என்பதனுல், அச்சங்கரன் இறந்தகாலம் கூத்தருடைய 16 பிராயத்திற்கும் 20 பிராயத்திற்கும் இடைப்பட்டதாகு மென்று உய்த்துணரலாகும். கூத்தர் பிறந்த காலம் கி. பி. 1110 எனக்கொள்ளப்படுதலாற் சங்கரனிறந்த காலம் கி. பி. 1127 ஆம் ஆண்டினை அடுத்ததாகுமென்று ஊகிக்கப்படும்.

கம்பர், சங்கரனுடைய இளையமகனும், சராமனுகியசடையனுக்குத் தம்பியும் ஆகிய இணையாரமார்பன் என்பானை * "என்னுடைய தம்பி சராம னுக்கிளையான். ....இணையாரமார்பனி

* 'செந்தமிழ்' தொகுதி-ரு, பக்கம்-அரு.

வன்" என்று பாண்டியனுக்கு அறியவுரைத்தலாற் கம்பராற் றம்பி யென்று சிறப்பிக்கப்பட்ட இணையாரமார்பன் பிறத்தற்குமுன்னே கம்பர் பிறந்தவராதல் தெளியப்படும். இதனாற் கம்பர் பிறந்த காலம் சங்கரன் இணையாரமார்பனைப் பிறப்பித்தற்குமுன்னேயாமெனத்தேறலாம். கம்பர் தெய்வவரத்தினாற் கவிசொல்லிய நாளில் முதன் முதற் பாடிய 'மோட்டெருமை வாவிபுக' என்னும் வெண்பாவின்கண்ணே வெண்ணைநல்லூரைச் சங்கரனூர் என்று கூறுமல் "நாட்டில், அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு, முடையான் சரராம னூர்" எனவே கூறுதலாற் கம்பர் கவித்திறம் எய்தற்குமுன்னே சடையன் கொடைத்திறம்பயின்று சிறந்தனன் எனவும் அக்காலத்துச்சங்கரன் இல்லையாயினன் எனவுந்துணியலாகும். கம்பர் கவித்திறமெய்தற்குமுன்னே சடையன் கொடையாற் சிறந்தனன் என்பதனாலும் கூத்தர் புலமை நிரம்பி விக்கிரமனைப்பாடும் போதே சடையனாகிய திரிகர்த்தன் சிறந்து விளங்கினன் என்பதனாலும் சடையன் கம்பருக்கு மூத்தோனாகக்கருதப்படுகின்றான்*. அங்ஙனமாயின் கம்பர் பிறந்தது, சங்கரன்காலத்தே சடையன்பிறந்தத ற்குப்பின்னும் இணையாரமார்பன் பிறத்தற்குமுன்னும் ஆம் எனத் தெளியப்படும். கம்பர் கவித்திறம் எய்தற்குமுன்னே சங்கரன் இறந்துவிட்டனன் என்பதனாலும் கூத்தர் இளமைக்காலமெல்லாம் சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனர் என்பதனாலும் கூத்தர்விளங்கிய விக்கிரமன்காலத்தே கம்பரும் புலமையாற் சிறந்தது புலப்படாமையாலும் கம்பர் கூத்தருக்கும் இளையராகவே துணியப்படுவர். கூத்தர் பிறந்தது கி. பி. 1110-ஆம் ஆண்டினை அடுத்தும்,சங்கரன் இறந்தது கி. பி. 1127ஆம் ஆண்டினை அடுத்தும் ஆதலின்,கம்பர் பிறந்தகாலமும் அந்தக் கிபி 1110 க்கும் கிபி 1127க் கும் இடைபட்டதாகுமென்று தெளிந்துகொள்க. இந் நிலையிற் சடையனையும் கூத்தரையும் ஒத்த பிராயத்தினராகக் கொள்ளுதலும்

* 'என்னுடைய தம்பி சரராம னுக்கிளையான்' என்புழிச் சரராமனுக்கிளையனாதலால் எனக்குந் தம்பியாவான் என்பதே கருத்தன்றி, என்னுடைய தம்பியாகிய சரராமனுக்கிளையான் என்பது கருத்தில்லையாதல், 'அடியேற் குஞ் சாருஞ்சரரா மனுக்குமொரு தம்பியெனக்கம்பன் புகழும்' எனச்சோழ மண்டலசதகமுடையார் கூறியதனானே தெளிந்துகொள்க.

அவ்விருவருக்கும் கம்பர் 10 வருடம் இளையராகக்கருதுதலும் இழுக்காவாம். அவ்வாறு கொண்டு கருதிற் கம்பர் பிறந்தது கிபி 1120-ஆம் ஆண்டினை அடுத்ததாமென உய்த்துணரப்படும். இதனாற்கம்பர் காலத்துக்கு முதலெல்லை சங்கரனது இறுதிக்காலத்தை யடுத்ததென்பதும், அதுவே விக்கிரமனது இடையாட்சிக்காலமென்பதும் உணர்ந்து கொள்க.

இனிக்கம்பருக்கு அடைப்பைகட்டிச் சிறப்புச்செய்த ஓரங்கல் உருத்திரன் காலத்தை யாராயுமிடத்து, ஓரங்கற் கணபதியரசர்களுள் இவ்வுருத்திரன் என்னும் பெயரினர் இருவரிருந்தமை காணப்படும், அவருள் ஒருவன் கிபி 1162க்குச் சிறிதுமுன் முதல் கிபி 1197க்குச் சிறிதுபின்வரை அரசாட்சிபுரிந்தனன் எனவும் மற்றொருவன் *கிபி 1288முதல் கிபி 1323 வரை அரசாண்டனன் எனவும் புராதனசாசன ஆராய்ச்சி செய்தார் கூறுவர். இவருள் பின்னோனாகிய உருத்திரன்காலந்தொட்டேதான் பிரதாபருத்திராப்தம் வழங்கியது. இச்சங்கத்துள்ள சில பழையதமிழ் ஏடுகளில் அவ்வவ்வேடு எழுதப்புக்க (அல்லது எழுதிமுடித்த) அப்தம் ஆண்டு திங்கள் நாள் முதலியவற்றை வரைந்த பிரதிகளும் உள்ளன. அவற்றுள் இற்றைக்கு நூற்றுறு வருடங்கட்கு முற்பட்டதெனத் தெளியப்படுகின்றதோர் திருக்குறட் பரிமேலழகருரையேட்டில் அவ்வேடு எழுதப்புக்ககாலம் "கலிபிறந்து சென்றது ௪௲௯௱௵; அதில் விக்கிரமாதித்தன் சென்றது ௲௮௱௪௰௯௵.போசராசன் சென்றது ௲௭௱௯௰௯௵.சாலிவாகன சகாப்தம் ௲௭௱௨௰௧௵. ராமதேவாப்தம் ௫௱௰௯௵.பிரதாபருத்திராப்தம் ௫௱௰௧௵.கிட்டிணதேவராயரப்தம் ௨௱௭௰௵. கொல்லம் ௯௱௨௰௫௵.........இதன்மேற் செல்லாநின்ற சித்தார்த்தி௵ மார்கழி௴ ௨௧௮ குருவாரம்" என வரைந்துள்ளது. இதன்கட் கூறப்பட்ட மற்றை அப்தங்களெல்லாம் இப்போது வழங்குவனவற்றோடு கணக்கிடுமளவிற் பொருந்தியனவேயாதலால் இதன் பிரதாபருத்திராப்தமும் உண்மையுடையதேயாமென நம்புதலாகும். இதன்கட்கண்ட சகாப்தம் முதலியவற்றாலிவ்வேடு நூற்றுறு வருடங்களுக்கு முற்பட்டதாமெனத்துணியலாம்.

* கி-பி. 295 என்றலுமுண்டு.

அந்நூற்றுறினையும் ருகக-வருடத்துடன் கூட்டிநோக்கின் இப்போது பிரதாபருத்திராப்தம் சுகஎ எனத்துணியப்படும். இந்த சுகஎ-வருடங்களையும் நிகழும் கிபி 1905ஹல் கழித்தால் பிரதாபருத்திரன் காலம் கிபி 1288 என்னலாகும். இதுவே, பின்னோனுகிய உருத்திரன் ஆட்சி யெய்திய காலமாம். கம்பருக்கு அடைப்பை கட்டிய உருத்திரன் இப்பின்னோனுயின், கூத்தர் விக்கிரமனுலாப்பாடுதற்கு முன்னேஇறந்த சங்கரன்காலத்தே இணையார்மார்பனுக்குமுன்னே பிறந்த கம்பர் (அது கிபி. 1120 அடுத்தது) கிபி. 1288க்குப் பிற்பட்டும் இருந்தாரெனப்பட்டுக் கம்பர்வாழ்நாள் 160 வருடங்களுக்கு அதிகமாகி இயற்கையிற்றிரிந்து பொய்யாதலொருதலையாம். முன்னோனுகிய உருத்திரனைப் பற்றி ஆராயுமிடத்து, அவன் பெயரிட்ட சாசனங்கள் கோதாவரிஜில்லா திராக்ஷாராமா என்ற ஊரில் கி. பி. 1179-இல் அமைந்தது ஒன்றும் (Sewells List of Antiquities Madras, Vol I, P. 31) கிருஷ்ணாஜில்லா குங்குலகுண்டா என்ற ஊரில் கி. பி. 1197-இல் அமைந்தது ஒன்றும் (Do. Do. P. 71) 1162-இல் அமைந்தது மற்றொன்றும் (Do. Vol, II, P 173) காணப்படுதலால் இவன் கி. பி. 1162 க்குச் சிறிது முன்னும் கி. பி. 1197-க்குச்சிறிது பின்னும் ஆட்சிபுரிந்தவனுகக் கருதப்படுகின்றான். கி. பி. 1120-ஆம் ஆண்டிலே அடுத்துப்பிறந்த கம்பர் கி. பி. 1200 க்குமேற் சில்லாண்டிருந்தாலும், அது மக்கள் யாக்கைக்கு இயல்பாகிய ஆயுளைக் கடவாததலின் முதலாம் பிரதாபருத்திரனுடைய ஆட்சியின்இறுதிக்காலமாகிய கி, பி, 1197-இலும் கம்பர்இருந்து அவனால் அடைப்பை கட்டுஞ் சிறப்பைப் பெற்றன ரென்பதில் விரோதமில்லையாம். இதனுற் கம்பருக்கு அடைப்பைக்கட்டினவன் முதலாம் உருத்திரன் எனவும் அவன் அவருக்கு அது புரிந்த காலம் கி. பி. 1162-க்கு 1197-க்கும் இடைப்பட்டாதாகுமெனவும் கொள்ளத்தகும். இவற்றுற் கம்பருடைய காலத்திற்கு இறுதியெல்லை முதலாம் உருத்திரனுடைய அரசாட்சியின் இறுதிக்காலமே யாமென்பதுணர்ந்து கொள்க.

கி. பி. 1162-க்குப் பிற்பட்டகாலம் இராசராசன் காலமாதலால் கம்பர் ஓரங்கல் உருத்திரன்பாற்சென்று சிறப்பெய்தியதும், அவன் காலத்தேயாதல் ஒருதலையாம். இதனுற் கம்பரை முனிந்த

வனும் கொன்றவனும் ஆகிய சோழன் இராசராசனே என்பதும் உய்த்துணரப்படும். இவன் காலத்தோடு சோழருடைய பேரரசாட்சி சிதைந்ததெனவும் பின் சிற்சில சிற்றரசர்களால் நாடு ஆளப்பட்ட போது ஓரங்கல்வேந்தர் படையெடுத்துச் சோணாட்டைக் கைப்பற்றிக்கொண்டு அதனை 14-ஆம் நூற்றாண்டுவரை ஆண்டனரெனவும் புராதனசாசன ஆராய்ச்சியாற் றெரிகிறது (Sewells List of Antiquities, Madras. Vol. II. P.P. 159) இதனாலே "என்பாட்டம்பு நின்குலத்தைச் சுட்டெரிக்கு மென்றே துணி' என்று கல்வியிற் பெரியரால் முனியப்பட்டவன் இவ்விராசராசனே யாவனென்று கொள்க. கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியதும் இவ்விராசராசன் காலமேயாகும். கூத்தர் தக்கயாகப்பரணிபாடியகாலமும்இவன் காலமேயாம். இவ்விராசராசன்காலம் கம்பருடைய 42-வயதுக்கு மேற்பட்டதாகலின் அதுவே இவரதுளத்தூய்மைக்கும் பத்தியொழுக்கங்கட்கும் உலகியலுணர்ச்சிக்கும் வீட்டுநெறி விழைவுக்கும் ஏற்றதாகும். கி. பி. 1162-க்கு முன்னெல்லாம் இவரது யௌவனகாலமாம். அக்காலங் குலோத்துங்கன் காலமே. அக்காலத்தே தான் இவர் வல்லியை விழைந்ததும் ஏரெழுபது பாடியதும் மும்மணிக்கோவை பாடியதும்ஆம். இவரது கவித்திறத்துக்கு உவந்து இவருக்குப்பெருஞ்சிறப்பெல்லாஞ் செய்தவன் குலோத்துங்கன் ஆவன். அவன் இவருடைய 42-ஆம் பிராயத்தோடு இறந்தனன். இதன் பின்னே தான் 'இராமாயணமெனும்பத்தி வெள்ளம்' கம்பருடைய அறிவுடை நெஞ்சிற் குடிகொண்டதாகும்.

இனி, "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு, நண்ணிய வெண்ணெ நல்லூர் தன்னிலே கம்பநாடன், பண்ணிய விராம காதை" என்பதனாற் கம்பர் இராமாயணம் பாடியரங்கேற்றிய காலம் சகாப்தம் 807—என்றுகூறுதலாற் கம்பர் காலமே மேற்காட்டிய காலத்துக்கு 200-வருடம் முற்பட்டதன்றோ வெனிற் கூறுவேன். சகாப்தம் அ௦எ - என்பது கி. பி. 885 ஆகும். அது விக்கிரமன் காலத்துக்கு நெடுந்தூரமானது. அங்ஙனமாயின் அஃது ஒட்டக்கூத்தர் காலமும் அன்று. கூத்தர்காலமன்றாயிற் சங்கரன்காலமுமன்று. சங்கரன்காலமன்றாயிற் சடையன், சேதி

ராயன் காலமுமன்று. சடையன் சேதிராயன் காலமன்றாயிற் கம்பர் காலமுமன்றாம். ஓரங்கலுருத்திரன் காலமும் இஃதன்றாதல் கூற வேண்டா. இங்ஙனம் கம்பர் காலத்தவராகத் தெளியப்பட்ட வேறுபலர் காலங்கட்கும் இக் கி பி. 885-பொருந்தாதாதலின் அது கம்பருக்கும் பொருந்தா தென்பது ஒருதலை. மேற்காட்டிய பிரபல பிரமாணங்களாற் றெளியப்பட்ட கம்பர் காலத்தோடு பொருந்த வைத்து நோக்கின், இந்த'எண்ணியசகாத்தம்'என்ற செய்யுள் சிறிது பாடம்பிழைத்ததென்றேனும் வேறோர் பொருளுடைய தென்றேனும் கருதப்படும். பாடம் பிழைத்தலாவது 'எண்ணிய சகாத்தம் என்னூற்றேழின்மேல் எனவிருந்ததை "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின்மேல்' எனக்கொண்டதாம். அஃதாவது 'எண்ணிய சகாத்தம் என்கின்ற நூற்றேழின்மேல்' என்றவாறாம். ஆயிரம் என்ற பேரெண்ணையொழித்துக் கொல்லமாண்டு முதலியவற்றை 80-ஆம் ஆண்டு என்பது முதலாகச்சிற்றெண்ணையே வழங்கல் இக் கால வழக்காதல்போலப் பண்டும் சகாப்தம் ஆயிரத்து நூற்றே ழினைச் சகாப்தம் நூற்றேழென வழங்கியதென்க. இனிவேறோர் பொருள்பெறுதலாவது "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்" என்ற பாடமே 'கருதிய சகாத்தம் எண்ணப்பட்ட நூற் றேழின்மேல்" என்றபொருள் படுதல். இவ்விருவகையினும் ஆயிரமாகிய பேரெண்ணை யொழித்து உலகவழக்குநெறியே தழு விச் சிற்றெண்ணினை கூறியதாமெனக்கொண்டால், சகாப்தம் 1107 என்பது கி பி. 1185 ஆம்ஆண்டாம். இந்தக்கிபி 1185 ஆம் ஆண்டு கம்பருக்கு 65 ஆம் பிராயமாமெனக் கொள்ளப்படுமாதலின் அது கம்பர்காலமேயாதல் தேறப்படும். இந்த 'எண்ணிய சகாத்தம்' என்ற செய்யுளை இவ்வாறு இணக்கிக்கொள்வது, மேற்காட்டிய உண்மைப் பிரமாணங்களோடு பொருந்த நோக்குமிடத்து உசிதமே யாகும். அன்றியும் இஃது * "இராமாயணமெனும் பத்தி வெள்ளங் குடிகொண்ட கோயி" லாகிய இராமாநுஜமுநிவரர் நிலைநாட்டிய வை ணவம் தழைத்தோங்குகின்ற காலமுமாகும். அக்காலத்தே தான் ஞானபூரணரான ஸ்ரீசடகோபரது குணாநுபவம் செய்யும் அடியா ரும் பகவரும் மிக்கனராவர். கம்பர் சடகோபரந்தாதிக் கண்ணே

* இராமாநுச நூற்றந்தாதி. செய்யுள்—கூஎ.

*

"கூட்டங்க டோறுங் குருகைப் பிரான்குணங் கூறு மன்ப, ரீட்டங்க டோறு மிருக்கப்பெற் றேமிருந் தெம்முடைய, நாட்டங்க டோறும் புனல்வந்து நாலப்பெற்றேம்" எனப்பாடுதலால் இவர்காலத்தே பெரிய கோயிற்கண்ணே கூட்டம் கூட்டமாகக் குருகைப்பிரான் குணுநபவம்பண்ணும் பரமபத்தர்கள் மிக்கிருந்தனரெனவும், அத்திருக்கூட்டத்தோடெல்லாம் தாமும் உடன் இருக்கப்பெற்றார் எனவும் இருந்து ஆநந்தக்கண்ணீர் பெருக்கினரெனவும் அறியப்படும். இங்ஙனம் கம்பர் குருகைப்பிரானார் திருவடிகளில் ஈடுபடுதற் கேற்ற காலம் அதுவேயாமென நோக்கிக்கொள்க. ஈண்டுக்காட்டிய கி. பி. 1185-ஆம் ஆண்டு இராசராசன் ஆட்சியின் இடைக்காலமாதல் ஆராய்ந்துகொள்க.

இனி இவர் இராமாவதாரத்து "சென்னிநாட்டெரியல் வீரன் றியாகமாவிநோதன் றெய்வப், பொன்னிநாட்டுவமைவைப்பை"* எனக்கூறிய விடத்துச் சென்னியாகிய சோழனொருவனை 'வீரன்' என்னும் பெயரால் வழங்கியுள்ளார். கூத்தர் இராசராசனுலா விறுதியிற் பாடிய,

"அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலர்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோத யா."

என்னும் வெண்பாவிலும் இராசராசனுக்கு வீரசப்தமே பெயராகப் பயின்றுள்ளது. இவனை வீரராசராசன், வீரராசேந்திரன் எனவும் வழங்குவ ரெனத் தெரிகின்றது. இதனாலும் கம்பர் இராமாயணம் பாடிய காலத்தவன் இராசராசனென ஊகித்தலாகும். கம்பர் இராமாவதார இறுதியில் "அறைபுகழ்ச் சடையன்வாழி அனுமனெப்போதும்வாழி" என வாழ்த்துக் கூறுதலாற் சடையன் அவர் இராமாயணம்பாடி முடித்தகாலத்தும் இருந்தனன் என்று கொள்ளப்படும். கூத்தர் உத்தரராமாயணம்பாடிய காலமும் அதுவாம். அக்காலத்துச் சடையற்கும் கூத்தருக்கும் எழுபது-வயதாமெனக் கொள்ளலாகும்.

இனி "ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூற்றொழித்து" என்னும் வெண்பாவினை வைத்து நோக்கின் கம்பர் இராமாயணம்பாடி

* யுத்தகாண்டம், மருத்துமலைப்படலம்.

யது சகாப்தம்-கக00 (அஃதாவது கி. பி. 1178) எனத் தெரிய லாகும். *அஃது 'எண்ணிய சகாத்தம்' என்றசெய்யுளாற் கொள்ளப் பட்ட சகாப்தம் 1107-க்கு (அஃதாவது கி. பி. 1185-க்கு) எழுவரு டம் முற்பட்டதாமெனக்கருதப்படும். 'எண்ணிய சகாப்தம்' என்ற செய்யுள் அரங்கேற்றக் காலமாக வைத்துக்கொண்டால் கம்பர் இரா மாயணம் பாடிமுடித்தகாலம் அவ்வரங்கேற்றத்திற்கு 7-வருடம்முற் பட்டதாமெனத் தேறலாம்.

இங்ஙனம் பல்லாற்றானோக்கினும் கம்பர் காலம் 1120-க்கும் 1200-க்கும் இடைப்பட்டதாதல் கண்டுகொள்க.

இங்ஙனம்
ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

உ

சிவமயம்.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

ஷ

கணிகையர் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
பணியணி யினமுத்தம் பலவித நிலமன்ன
ரணிநெடு முடியொன்றொன் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை தொகுமன்னன் வாயிலின் மிடைவாரும்.

என்னும் ௱௨-ம் செய்யுளில் 'மணிமலைதொகு' மென்பது 'மணிமலைதொக' எனக்காணப்படுகின்றது. (உடம்பின்நெருக்கினாலே) பணியணிமுத்மும், முடியறைதலினாலே பொற்பொடியும் மணிமலையுந்தொக, மன்னர் வாயினின் மிடைவாரும் எனப்பொருள் கொள்ளுமிடத்து 'தொக' என்பதே பொருத்தமுடைத்தாதல் காண்க. தொகமிடைவாரும் என்க. 'தொகும்' எனக்கொளின் அது வாயிலுடன்முடிந்து இயைபின்றி முரணுமென்க.

---

* சகாப்தத்தினைச் "சகரராண்டு" என வழங்குதலுமுண்டு என்பர்.

ஷை.

மன்னரு முனிவரும் வானு ளோர்களு
மன்னமென் னடையனங் கனைய மாதருந்
துன்னினர் துவன்றினர் சுடர்கள் சூழ்வரும்
பொன்மலை யொத்ததப் பொருவில் கூடமே.

என்னும் சச-ம்செய்யுளில் 'துன்னினர்துவன்றினர்சுடர்கள்சூழ்வரும்' என்பது, 'துன்னினர்துவன்றலிற்சுடர்கள்சூழ்வரும்' எனக்காணப்படுகின்றது. துவன்றினர் எனக்கொளின், அது முற்றாய்நிற்குமேயன்றிப் பொன்மலை யொத்ததற்குக் காரணமாய்நில்லாமையின் துவன்றலின் என்பதே பொருத்தமுடைத்து. காரணம் வருவித்தல் காரணமில்வழி என்க.

பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி வசிட்டன் வளர்த்தான்.

என்னும் எக-ம் செய்யுளில் 'அங்கணிருக்கினிலாயிரநாமச்—சிங்கமணத் தொழில் செய்ததிறத்தால்' என்பது 'அங்கமுதத்தினையாயிரநாமச் சிங்க மணத்தொழில் செய்தபினிளையோர்' எனக் காணப்படுகின்றது, இராமனுக்கு அக்கினியை வசிட்டன்முன் வளர்த்ததாகக் கூறப்படுதலின், ஈண்டு இளையோர்க்குக்கூறலே சிறப்பாதலினாலும், இதன்முதற்செய்யுளில் இராமனை "பாயலணைந்தான்" எனக்கூறப்படுதலின் அவனுக்குப்பின் "அங்கி வளர்த்தான்" என்றல் மாறுபடக் கூறலாய் முடியுமாதலானும், 'செய்த பினிளையோர்' என்பதே பொருத்தமுடைத்து. 'அங்கணிருக்கினில்' என்பதிலும் 'அங்கமுதத்தினை' என்பதும் பொருத்தமுடைத்தாதல்காண்க.

இவைகளேயன்றி இன்னும், கோலங்காண்படலம் ரு-ம் செய்யுளில் "மதியினைத்தந்த" என்பது "மதியினைநக்க" எனவும், அ-ம் செய்யுளில் "வளர்பிறை வகிர்ந்ததென்கோ" என்பது 'வளர்பிறை வதிந்தசென் கோ' எனவும், பரசுராமப்படலம் ௩௩-ம் செய்யுளில் 'வேரறக்களை கட்டு' என்பது "வேரறக்களைந்திட்டு' எனவும் காணப்படுகின்றன. இவற்றுள்ளும், முன்னையவற்றுள்ளும் பின்னையவே பொருத்தமுடையவாதல் காண்க.

அயோத்தியாகாண்டம்

மந்திரப்படலம்.

வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப லின்றியே
வையம்யா ணுண்டவாண் டுங்கண் மாட்சியா
லையமி லறுபதி னுயி ரம்மரோ.

என்னும் கசு-ம் செய்யுளில், 'வையம்யாறுண்டவாண்டுங்கண்மாட்சியா—லையமிலறுபதினுயிரம்மரோ' என்பது 'வையமென்புயத்திடைநங்கண்மாட்சியா—லயிரண்டாயிரத் தாறு தாங்கினேன்' எனக் காணப்படுகின்றது. முன்னையது இசைச்சிறப்பின்மையின், பின்னையதே சிறப்புடைத்து. ஐயிரண்டாயிரத்தாறு - அறுபதினுயிரம்.

௯

கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோ
னுண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல்போலவக்கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டான்.

என்னும் ௰க-ம் செய்யுளில், 'கடலிடைக்கிழவோன்' என்பது 'கடற்புவிக்கிழவோன்' எனக் காணப்படுகின்றது. பூமியை யுணர்த்துமிடத்து 'இடை' என்பதினும் 'புவி' என்பதே சிறப்புடைத்து. ஏழாம்வேற்றுமையுருபு முதலியனபோலவுங் கொள்ளும்படி நிற்றலின், இடைஎன்பது சிறப்பின்றென்க.

௯

தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையு
மானவ வையநின் மகற்கு வைகலு
மீனமில் செல்வம்வந் தியைக வென்னவே.

என்னும் அக-ம் செய்யுளில், 'மானவவையநின்மகற்குவைகலு—மீனமில்செல்வம்வந்தியைகவென்னவே' என்பது, 'மானமுமையநின்மகற்குவைகுமா, லீனமில்செல்வம்வந்திசைவதென்னவே' எனக்காணப்படுகின்றது. 'குற்றமில்லாத செல்வம்வந்திசைவதாகத் தானமுதலியன நின்மகற்கு வைகும் எனப் பொருள்கொள்ளுமிடத்து வாய்ந்துமிளிர்தலானும், பிற்செய்யுட்கருத்துக்கும் இதுவேயியைபுடைத்தாகலானும், அன்பினை யினிதுகேளெனக்கூறியவரைப் பின்வாழ்த்தியதாகக்கூறல் பொருந்தாதாகலானும், என்னஎன்பதற்கு முடிபின்மையாலும், இராமனுக்குச்செல்வம்வந்திசைகவென்று தானமுதலியன செய்கின்றார்களென்று பொருள்கொள்வதற்கும் தகவுமுதலியன தகுதியன்றாதலோடு பிற்செய்யுட் கருத்தும் மாறாய்நிற்றலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. இராமனுக்குச் செல்வம்வரின் தானம்முதலியன வைகும்: அதனாற் பிறர்க்குப் பயன்படும் என்பது கருத்து. இதுபற்றித்தான் 'ஊருணி நிறையவும்' என்பது முதலாகப் பின்வியந்துகூறினர். முன்

னும் இக்குணங்கள் அவனுக்கு இருப்பினும் செல்வம்வந்தாற் சிறந்துகாட்டு மென்பார் இங்ஙனங் கூறினர். வைகல் - நிலையுறல்.

ஷை

செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கின்பால்
வெம்மையி னொழுக்கத்தின் மெய்மை மேவினீ
ரென்மக னென்பதென் னெறியி னீங்கிவன்
நும்மகன் கையடை நோக்கு மூங்கென்றான்.

என்னும் அடு-ம் செய்யுளில், 'நும்மகன்கையடைநோக்குமூங்கென்றான்' என்பது 'நும்மகன்கையடைநுமக்கென்றோதினான்' எனக்காணப்படுகின்றது. கையடை என்பதற்கு நுமக்கு என்னும்சொல் இயைந்துநிற்றலானும் இசைச்சிறப்புண்மையானும் 'நுமக்கென்றோதினான்' என்பதே சிறப்புடைத்து.

மந்தரை சூழ்ச்சிப்படலம்.

அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலின் வீழ்கின்றா
யுரைசெயக் கேட்கிலை யுணர்தியோ வென்றாள்.

என்னும் சுக-ம் செய்யுளில், 'உரைசெயக்கேட்கிலையுணர்தியோவென்றாள்' என்பது, 'உரைசெயக்கேட்கிலையுணர்வில்லோயென்றாள்' எனக்காணப்படுகின்றது. கேளாமைக்கு உணர்வில்லாமை ஏதுவாகலானும், கழறும் மொழியாகலானும் 'உணர்வில்லோய்' என்பதே பொருத்தமுடைத்து. அறிகுதி என்றலும், நீயாதல் அறிந்து விலகுகின்றாயோ என்றலும் இத்துணைச் சிறப்பின்மை காண்க.

ஷை

தீய மந்தரை யவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரவுண்மை யாலு
மாய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்.

என்னும் எஎ-ம் செய்யுளில், 'மாயையும்மவர்பெற்றநல்வரவுண்மையாலும்' என்பது, 'மாயையுந்தவும்வரம்பெற்றவான்முறையாலும்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்தமும் இசைச்சிறப்புமின்மையின், பின்னையதே பொருத்தமுடைத்து. அமரருடைய மாயையுந்தலை

லும் அவர் (விஷ்ணுவினிடத்துப்) பெற்ற வரத்தாலும் முனிவர் தவத்தாலும் திரிந்தது என்க. பெற்றவரம் - இராவணசங்காரம்.

கைகேசி சூழ்வினைப்படலம்.

வரங்கொள வித்துணை மன்னு மல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தீவ னேகொ ளென்பாற்
பரங்கெட விப்பொழு தேப கர்ந்தி டென்று
னுரங்கொள் மனத்தவள் வஞ்ச மோர்கி லாதான்.

என்னும் கூ-ம் செய்யுளில், 'இரங்கிடவேண்டுவதீவனே கொளென்பால்' என்பது, 'இரங்கிடவேண்டுவதில்லையீவனென்பால்' எனக்காணப்படுகின்றது. வரங்கொள்ளுதற்கு இத்துணை அல்லலெய்தி இரங்கவேண்டுவதில்லை எனப் பொருள்கொள்ளுமிடத்து இல்லையென்பதில்லையாயின், இரங்கிடவேண்டுவதுஎன்பதற்கு முடிபின்மையின், 'வேண்டுவதில்லையென்பதே பொருத்தமுடைத்து. பிறவாறு வலிந்துபொருள்கோடல் இத்துணைச் சிறப்பின்றென்க.

(இன்னும் வரும்)

சி. கணேசையர்.

தமிழ் விணைச்சொல்லில் எதிர்காலம்.

தொல்காப்பியமுதற் றமிழிலக்கணங்கள் எல்லாவற்றிலும் வினைச்சொற்களில் இறந்த, நிகழ், எதிர் என்னும் முக்காலம் வழங்குமென்று தேறப்பட்டது. அவற்றிற்குக் குறிப்புகள் இறந்ததுக்கு த், இன் என்றும் நிகழ்கின்றதுக்கு ஆகின்று, கின்று, கிறு என்றும் எதிர்வதுக்கு ப், வ் என்றும் வரைகின்றார் ஆசிரியர்கள்.

ஆனால் நிகழ்காலக் குறிப்புகள் மூன்றில் முதல் ஆகின்று விட்டுவிட வேண்டும்: அது ஆ வென்னும் வினையெச்சத்தானும் நின்று என்னும் வினையெச்சத்தானும் சேர்க்கப்பட்டதாவதால். கின்று, கிறு இரண்டும் சோதித்துப்பார்க்குமளவில் கின்று பழையது, கிறு புதிது ஆக இருத்தல் நிச்சயித்துக் கொள்வதாகும்.

எதிர்காலமோ வென்றால் ப், வ் முடிவுகளொழிய வேறேவிதமாய்த் தெரிவிக்கக்கூடும். பலபழைய காப்பியங்களிலும் நூற்களி

னும்* செய்கேன், என்கோயான், உரைக்கோ, உண்கும் யாம், கொடுக்குநும், செய்குவம், படர்குவை, நயக்குநர், காண்கம், அயர்கம், எழுகம், வாழ்கலேம் முதலியவை காணப்படுவன. அவைகளெல்லாவற்றிலுங் கு என்னுங் குறிப்பு அகப்பட்டது. அதுவும் கின்று, கிறு என்னும் நிகழ்காலக் குறிப்புகளிற்றொன்றும். அந்தச்செய்தியை யெண்ணிக்கொண்டு கிறு என்பது கின்றிற் சுருக்கமாமென்று நினைத்து, கின்று என்பது குவும் இன்றும் சேர்க்கப்பட்டமையால் வந்ததென்று நிச்சயப்படுத்துகின்றேம். இன்று என்பது இக்காலம் இந்நாள் என அர்த்தங்கொண்டு வழங்கும்.

அது நிற்க. கு எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் குறிப்பாகுமென்று சாதித்துச் சொல்லலாம். அதுக்கு, நிகழ்கின்றதுக்கு இன்றும், எதிர்வதுக்கு பவும், வவும் சேர்த்துக்கொள்ளலாவது. ஆகையாற் றமிழ்ச்சொல் முதனூள்களில் வினைச்சொற்கு இரண்டு காலமாத்திரம் இருந்தனவென்று வைத்துக்கொண்டால் நியாயமாம். அக்காலங்களில் ஒன்று இறந்தகாலம் மற்றொன்று இன்னமிறந்தில்லாதகாலமாய் நின்றனவாகும். பின்னூள்களில் இன்றும் நாளையும் பிரித்துக்குறித்துச் சொல்லவேண்டியதால் கு-இன்று கின்று ஒருபாலும் குவ், குப் ஒருபாலும் சொல்லிப் பின்பு குவ், குப் என்னுமல்ப் வ் மாத்திரம் குறித்து வந்தார்கள்.

மலர்தலையுலகில் வழங்கும் பலமொழிகட்கும் அத்தன்மையே. முன்னோர்கள் எதிர்காலம் தெளிவாய் உணர்ந்து வந்தார்களென்று ஆராய்ந்துகொள்ளப்பட்டது.

Prof. JULIEN VINSON, PARIS.

---

* குறள், சிந்தாமணி, மணிமேகலை, கலித்தொகை, ஐங்குறுநூறு முதலவற்றிற் காண்க.

சேக்கிழார்காலம்.

சேக்கிழார் காலத்தை வரையறுக்கும் விஷயத்தில் இவராற்செய்யப்பட்ட பெரியபுராணம் வெகு உபயோகமாயிருக்கிறது. இதுவே தேவாரம்பாடிய மூவருள் முதலிருவர் காலங்களை நிர்ணயிக்கவும் ஏதுவாயிருந்தது. தம் திருத்தொண்டர்புராணவரலாற்றில், உமாபதிசிவாசாரியர், சேக்கிழாரை ஆதரித்த சோழசக்கரவர்த்தியை "கங்கைகுலதிலகர்" "தளவமாலையபயன்" "நரேந்திரபதி" என்னும் பலபெயராற்குறிக்கிறார். பெரியபுராணத்திலும் இவ்வரசன் "அபயன்" "அநபாயன்" "குலோத்துங்கன்" என்னப்படுவதல்லாமல்,

> "மேய விவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
> சேய வன்றிருப் பேரம் பலஞ்செய்ய
> தூய பொன்னணி சோழனீ டூழிபார்
> ஆய சீரன பாய னரசவை"

என்பதில் "பேரம்பலம் பொன்வேய்ந்தவன்" என்றும், சூரியவம்சத்திற் சேர்ந்தவன் என்பது தோன்ற "துன்னுசெங்கதிரோன் வழித்தோன்றல்" எனவும் புகழப்பெற்றுள்ளான்.

இவைகளையெல்லாம் உற்றுநோக்கின், இவ்வரசன் ராசகேசரி வன்மனாகிய குலோத்துங்கன் (அவனுவான் முதற்குலோத்துங்கன்) ஆகவிருக்கவேண்டும் என்பது புலப்படும். ஏனெனில், இவன் கங்கைகொண்ட சோழன் மகள் வயிற்றுப்பேரன் என்பது எல்லாருமறிந்ததே. இதனாற்றான் இவனை உமாபதியார் 'கங்கைகுலதிலகர்' என்றார். அபயன் என்னும்பெயர் இவ்வரசனுக்கு உண்டு என்பது கலிங்கத்துப்பரணி படித்த ஒவ்வொருவருக்குப் தெரியவரும். திருவாரூரிலிருக்கும் ஒருபெரிய சாஸநத்தில் இவ்வரசன் அநபாயன் என்னப்படுவான் என்று கூறியிருத்தலால், சேக்கிழார்காலத்தரசன் குலோத்துங்கன் I என்பதிலையமேயில்லை. இவ்வரசன் தன்னரசாட்சியின் இடையில் சிதம்பரத்திலிருக்கும் பேரம்பலத்தைப் "பொன்

வேய்ந்தான்" என்று திருப்பராய்த்துறையில் ஒருசாஸநமும், திருமாணிகுழியில் இரண்டு சாஸநங்களும் கூறுகின்றன. இவ்வரசன் கி. பி. 1070-1117 வரையிலாண்டவன் என்பதும் தெரிந்ததே. ஆகையால் இவ்வரசன்காலத்தவரே சேக்கிழார் என்பதனுல் இவர் கி. பி. 11-வது நூற்ருண்டின் கடைக்காலிலிருந்தவர் என்பதற்குத் தடையில்லை. மேற்கூறியவைகளை வற்புறுத்த அடியிற் சிற்சில மேற்கோள்கள் கொடுக்கப்படுகின்றன.

"வென்றி வெண்குடை யநபாயன்
செய்யகோ லபயன் திருமனத் தோங்குந் திருக்கயிலாய நீள்சிலம்பு"
(திருமலைச்சிறப்பு. 12, பெரியபுராணம்.)

"அன்னதொன்னகருக்கரசாயினன்
றுன்னுசெங்கதிரோன்வழித்தோன்றினன்
மன்னுசீரநபாயன்வழிமுதன்
மின்னுமாமணிப்பூண்மனுவேந்தனே":—
(திருவாரூர்ச்சிறப்பு 13. பெரியபுராணம்.)

"சென்னி வெண்குடை நீடநபாயன் றிருக்குலம்புகழ்..."
(இயற்பகைநாயனர் பு. 1. பெரியபுராணம்.)

"அந்நெறி வழியே யாக வயல்வழி யடைத்த சோழன்
மன்னிய வநபாயன்சீர் மரபின்மா நகருமாகுந்
தொன்னெடுங் கருவூரென்னுஞ் சுடர்மணி வீதிமூதூர்"
(எறிபத்தர் பு. 2. பெ. பு.)

"சென்னி யபயன் குலோத்துங்கச் சோழன்றில்லைத் திருவெல்லை
பொன்னின்மயமாக் கியவளவர் போரேறென்றும் புவிகாக்கு
மன்னர்பெருமா னநபாயன் வருந்தொன்மரபின் முடிசூட்டுந்
தன்மைநிலவு பதியைந்தி னென்ருய்விளங்குந் தகைத்தவ்வூர்"
(சண்டேசுரர் பு. 8. பெ. பு.)

"மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனர் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்"
(புகழ்ச்சோழர் பு. 8. பெ. பு.)

"வள்ளல் கொடைய நபாயன்."
(கோச்செங்கண்ணன் பு. 14. பெ. பு.)

மெய்கண்டதேவர் காலம்.

மெய்கண்டதேவர் சந்ததியில் (சிஷ்யபரம்பரையில்) நான்காமவரான உமாபதிசிவாசாரியார் தங் "சங்கற்பநிராகரண" த்தில்

"ஏழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞனி
ஆரும் விழவிற் பொற்றே ராலயத்து"

என்று கூறியிருத்தலினால் தாம் கி. பி. 1313-ல் இருந்தவர் என்று தெரிவித்துக்கொள்ளுகிறார். இவரினின்றும் நான்காமவராகிய மெய்கண்டர்காலம் சற்றேறக்குறைய கி. பி. 13-வது நூற்றாண்டின் முதற்பாதியா யிருக்கலாமென்று ஊகிக்கலாம். இஃது இப்படியிருக்க,

திருவண்ணாமலையிற் கண்ட ஒருசாஸநத்தில் "திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளாகிய எடுத்ததுவலியவேளர்" என்பவனொருவன் திருவண்ணாமலையில் தான் எழுந்தருளுவித்த ஒரு விக்கிரகத்துக்குச் சிலதானங்கள் செய்ததாகக் கூறியிருக்கிறது.

இச்சாஸநம் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜதேவர் (III) ஆட்சியில் 16-வது வருஷத்தில் இக்கோயிலிற் பதிப்பிக்கப்பட்டது. இவ்வரசன் கி. பி. 1216-ல் பட்டம்பெற்றான். ஆகவே இச்சாஸநத்தின் காலம் 1232 கி. பி. என்பது பெறப்படும். இச்சாஸநத்திற் கண்ட மெய்கண்டதேவனே சந்தானகுரவருள் முதல்வரான மெய்கண்டதேவர் என்பார் என்பது எந்துணிபு. ஆயின், இவரோன் இச்சைவாசாரியர் பெயர்பூண்ட வேறொருவராயிருக்கக்கூடாது என்னும் சங்கையுண்டாகலாம். அதற்குச்சமாதானம் கூறுவோம். கி-பி. 1232-ல் சைவாசாரியராகிய மெய்கண்டதேவர்பெயர் பிரபலப்பட்டிருந்ததென்றுகொண்டுஅப்பெயர்படைத்தவன் இச்சாஸனத்திற்கூறியவன்எனில் இவன் விக்கிரகஸ்தாபனப் பண்ணவும், அதற்கு தானங்கள்செய்யவும் உத்தேசம் 30 வயதுள்ளவனாயிருக்கவேண்டும். இவனுக்கு முந்தியிருந்தவர் பிரபலமடைந்திருந்தார் எனின் அவர்ஏதேனும் இவனுக்கு 50-60 வருஷங்களுக்கு முன்னாகிலும் இருந்திருக்க

வேண்டும். ஆதலால் இவர்காலம் சற்றேறக்குறைய கி-பி. 1150 ஆகவேண்டும். அப்பொழுதுஇவருக்குப் உமாபதியார்க்கும் இடையில் சுமார் 165-வருஷங்களாயிருக்கவேண்டுமென்று பெறப்படும். தசப்பன் பிள்ளைமுறையில்வரும் பரம்பரையிலே சாதாரணமாக ஒவ்வொருவருக்கு 30வருஷம்கொடுக்கில் போதுமென்றிருக்க, ஆசாரியசிஷ்ய பரம்பரையில் அவ்வாறு 30-வருஷம் கொடுப்பினும் இவ்விருவர்க்கு மிடையில் 120-வருஷங்களுக்கு மேற்படாது. ஆயின் மேற்கண்டபடி இவ்விருவருக்கும் இடையில் 165-வருஷம் சென்றிருக்கவேண்டுமென்று பெற்றது ஏற்காது. இவ்வாபாசம் நேர்ந்ததற்கு காரணம் சாஸநத்திற் கூறியவனும் சைவாசாரியரும் தனித்தனி யென்று கொண்டதனுல் என்பது தெள்ளிதினுணரப்படும். அப்படிக்கொள்ளாது இருவரும் ஓரே மனிதர் என்றுகொள்ளின் இது நேராது. இருவரும் ஒருவரோ என்று துணிய, இருவரும் திருவெண்ணெய்நல்லூருடையார் என்பது ஒருவாறு பயன்கொடுக்கிறது. ஆதலால் இவ்விருவரும் ஒருவரோ என்று கொள்ளின் மெய்கண்டதேவர்க்கு ஊருடையபெருமாள் என்றும் எடுத்ததுவலியவேனர் என்றும் இருமறு பெயர்களிருந்திருக்கவேண்டும் என்பது பெறப்படுகிறது. மேற்கூறியவற்றுலும், உமாபதிசிவாசாரியாரின் கூற்றுலும் மெய்கண்டதேவர்உத்தேசம் கி-பி. 1232 யிலிருந்தார் என்பதாகக்கொள்ளலாம்.

இங்ஙனம்

து. அ. கோபிநாதராவு.

திருவல்லிக்கேணி.

ஸ்ரீ:

வானசாஸ்திரம்.

10. 'கடல்சூழ்ந்த இப்புவியில் நிலைத்துள்ள ஜீவஜட.பதார்த்தங்கள் சோமசூரியர்களில்லையாயின் நிலைகொண்டோங்கா. சீத உஷ்ணங்கள் இவ்வுலகில் வாழ்வதற்கு இன்றியமையாதன அவையாம். அவைகளுக்குப்பிறப்பிடம் சந்திரசூரிய கோளங்களேயாம். நீரினம்சம் கொள்ளாச்சிவராசிகளும் புற்பூண்டுகளும், அவையிலவேல், இவ்

வுலகிலில்லை. அங்கீரோடு கலந்து நின்று உள்ளுயிராக விளங்குவது சோதியேயாம். அஃது ஐம்பூதங்களுக்கும் நடுநாயகமாய் நின்று, பஞ்சபூதமயமாகிய தேகங்களைக் காக்கின்றது. நீரின்றி மாந்தர்க்கு உயிர்வாழ்க்கை யமையாவாறுபோலச் சோதியின்றேல் நீரும் நிலை பெறாது. இதுபற்றியே மாந்தரின் வலப்புறம் சோதியல்லது சூரியன்பாகமென்றும் இடப்புறம் ஜலம் அல்லது சந்திரன்பாக மென்றும் வழங்கப்படுகின்றன. ஆண் பெண்ணிருவகையாரிடத்தும் சோமசூரிய பாகம் தனித்தனியே கூடியிருப்பினும் ஆண்மக்களிடத்துச் சோதியின் பாகம்மிக்கும், பெண்மக்களிடத்து நீரின் பாகம் மிக்கும், நிலைத்துளது. சூரிய உதய காலத்தில் கடனீரில் சூரிய கிரணந்தாக்கிப் பற்பல சோதிவடிவம் காணப்படுவதுபோல ஆண் பெண்ணிருதிறத்தாரிடத்தும் சோதியின் தோற்றமுண்டு. இத்தோற்றம் ஆடவர்களின் முகமண்டலங்களில் முகவொளியாய தேஜோமயமாகவும், பெண்வர்க்கத்தாரின் முகசந்திரனிடத்துச் சந்திர கலைகளின் கிளர்ச்சியாகவும், விளங்குகின்றன. ஆண் பெண்ணினத்தாரில் இச்சந்திர சூரியகலைகளின் மிகுதியுள்ளவர்கள் தாம் நரஜீவிகளிற் சிரேட்டரெனப்படுகின்றார்கள். இருவகைக்காந்திகளின் மிகுதிபற்றியே அவரவர்களின் போக போக்கியமும் வாழ்நாளும் ஆன்மஞானமும் அவ்வழியால்நேரும் ஆநந்தமும் விசித்திரகர்மங்களும் நிலைபெறுவனவாம். கல்வியுஞ் செல்வமும் அக்காந்திகள் வழியாலே நேர்வனவாம். பிண்டத்திலில்லாதது அண்டத்திலில்லை எனும் ஞாயத்தால் மண்ணுலக விண்ணுலகங்களுக்கும் இந்த நியாயம் ஒருபடியேயாம். இந்தக்காரணத்தால் அர்ச்சுனனெனும் வியாஜத்தாலே உலகுள்ளோர் நற்கதிபெறக் கீதோபதேசம்செய்தருளிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவும், செல்வம் கல்வி முதலிய நற்குணங்கள் நிறைந்த இடங்களி லெல்லாம் தன்னுடைய சத்துவம் நிலைத்துள்ளதென்று கூறியிருத்தல் காண்க.

11. பரம்பொருளின்தன்மையை நம்மாழ்வாரும் "சுடரொளியாய் நின்றதன்னுடைச்சோதி" என்றும் "துயரில் சுடரொளித்தன்னுடைச்சோதி" யென்றும் 'பரஞ்சோதி நீ பரமாய்' என்றும்கூறியிருத்தலாலும் 'உயிர் வேறின்றி ஒன்றாக உன்னோடென்னைக்கொண்டாய்' என்றும் கூறியிருத்தலாலும் பிரகிருதி சம்பந்த மில்லாத சோதியிற்

கலப்பதே பரமபத நிலையாதலுங் காண்க நாதமுங் கடந்து சோதியிற் கலப்பதுதான் பலசமயத்தாருள்ளும் ஒப்பமுடிந்த உண்மையாம். சோம சூரிய அக்கினிகளின் மர்மமுணர்ந்தோர், மும்மூர்த்திகளையும் அம்மூர்த்திகளின் உபாஸனைநெறிகளையும் அவர்களின்தேவிமார்களின் உபாசனை நெறிகளையும் நன்குணர்ந்து அனுட்டிக்கும் வஸிஸ்டர் வாமதேவர்முதலிய மகான்களுமாவர். சிவபிரான் சந்திரசேகரனாய் விளங்குவதும் நாராயணமூர்த்தி சூரிய மண்டலத்தின் நடுவில் விளங்குவதும் சோதிமண்டலங்களின் உண்மையுணர்ந்த மகான்களுக்கு விளங்கும் உண்மைகளாம். இஃதன்றித் துறவுபூண்டு நற்பதம் பெறுமவர்களும் சோதிவடிவாய் பிர்மரந்திரத்தைப் பேதித்துக்கொண்டு மேலே சோதிமண்டலத்திற் கலப்பரென்பதை யாருமறிவர். இராமாயணத்துள் இராமனை எதிரிற் கண்ட சுயம்பிரபையும் இராமனருள் பெற்றுச் சோதிவடிவாய் வெளிப்பட்டுப் பரஞ்சோதியிற் கலந்தது முண்டன்றோ. இதனால் பிரமநிஷ்டர்களின் பெருமையும் சுயம்பிரபை முதலிய பெண்மணிகளின் பெருமையும் சோதிசம்பந்தமாய் விளக்கப்பட்டன. விரிக்கிற் பெருகும். அர்ச்சிராதிமார்க்கமும் சோதிவழியேயாம். மும்மூர்த்திகளும் மூன்று சத்திமாருடன் தோன்றித் தொழில் புரிவது நாத சோதிகளின் சிறப்பாலேயாம். இந்த நாத சோதிகள் சோம சூரிய அக்கினிமயமாகிய மும்மூலங்களாம். ஸப்தரிஷிகளும் நக்ஷத்திரவடிவமாய் விளங்குவதுடன் அருந்ததி, துருவன் முதலினோரும் சோதிவடிவாகவே விளங்குகின்றார்கள். சூரியனையுபாசிப்பவர்கள் சூரியனை யடைவது போலச் சந்திரனைஉபாசிப்பவர்களும் சந்திரனையே அடைகின்றார்கள். சோதிமண்டலங்களாய் ஆகாயத்தில் விளங்குதலும் உபாசனை வழியால் நேர்ந்ததாம். உலகமாயையாம் பற்றுநீங்கி நாமரூபங்களுமொழிந்து சுயஞ்சோதிமேலோங்கிப் பரவொளியிற் கலப்பதுவே பற்றற்ற பரமநிலையாம். தேவர்களை உபாசிப்பவர்கள் அத்தேவர்களையடைந்து, இன்பானுபவம் பெற்று அவர்களழியும் போது அழிகின்றார்க ளென்றும் தன்னையுபாசிப்பவர்கள் ஈறிலின்பமான தன்னையடைந்து மீண்டு உலகிற்பிறவாத அழியாப்பெரும்பதத்திலிருக்கிறார்களென்றும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதை ஒன்பதாவது அத்தியாயத்தில் உபாசனாபேதங்களைச் சுட்டியிருத்தல் காண்க.

12. ஏழுவாரங்களுக்கும் மூர்த்தியாக விளங்கும் ஏழுகிரகங்களே மாதபக்ஷம் அயனம் வருஷம் முதலியவைகளுண்டாதற்கு காரணர்களாம். ஒரு குழந்தை இம்மண்ணுலகிற் பிறக்கும்போது இவ்வேழுகிரகங்களின் சோதிப்பிழம்பின் அளவைக் கொண்டே நம்மவர் அக்குழந்தையின் ஆயுள், கல்வி, செல்வம், முதலிய போக போக்கியங்களை நிர்ணயம் செய்கின்றார்கள். இம்மார்க்கம் மேற்கு நாடுகளில் அவ்வளவாய்த் தலையெடுக்கவில்லை யாயினும் அமெரிக்கா ஜர்மனிமுதலிய நாடுகளில் சோதிட சாஸ்திரத்தை வானசாஸ்திரத்தோடு சேர்ந்ததெனக்கொண்டு நம்மவரைப்போல ஜாதகங்களை எழுதிப்பலஞ்சொல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள். இதை நாடெங்கும் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியு மிருக்கிறார்கள்.

ஆதித்தியமண்டலம்.

13. சோதிமண்டலத்திலுள்ள கிரகங்களின் சலனத்தையும் பரிமாணத்தையும் தூரத்தையும் விளக்கும் நூல் வான சாஸ்திரமாம். இவ்வுலகந்தோன்றிய காலந்தொட்டு மாந்தர்கள் நக்ஷத்திர மண்டல கதியைப்பார்த்துக் களித்துவருகின்றார்கள்: மலைச்சார்புகளில் ஆட்டுமந்தைகளை இரவிற்பாதுகாத்து வந்த இடையர்களும், வீட்டின் மேற்றளத்திலிருந்து கொண்டு ஆகாயமண்டலத்தைப்பார்த்துக்களித்து வந்த தத்துவவிசாரணைக்கர்த்தர்களும், இந்நக்ஷத்திரங்களின் ஓட்டத்தையும் சங்கியை யையும் பார்த்து நிச்சயித்துள்ளார்கள். இனம் இனமாய்ப்பிரித்து நக்ஷத்திர வரிசையெனப் பெயரிட்டு மிருக்கின்றார்கள்.

14. கி. பி. 435-வது வருஷங்களின்போது மேற்கு நாட்டில் 'டாலமி' (Ptolemy) என்பவர் கண்டுணர்ந்த வானசாஸ்திரம் நடைபெற்றது. பூமிமத்தியில்நிற்க சூரியனும் நக்ஷத்திரங்களும் பூமியைச்சுற்றி ஓடுகின்ற தென்பது இவர்கண்டுணர்ந்த மார்க்கம். இவர் கிருஸ்துநாதர் பிறந்த 100 வருஷங்களுக்குப்பின் பிறந்தவர். இப்பொழுது நடைபெறும் மார்க்கம் கோபர் நிகஸ் என்பவர் கண்டு பிடித்தது. இதைக்கண்டுபிடித்தவர் 400வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவர் மார்க்கமோ சூரியன் மத்தியிலிருக்கப் பூமியும் மற்றக்கிரகங்களும் அதைச்சுற்றி ஓடுகின்றன வென்பதுதான். இஃதன்றி நிலையான நக்ஷ

த்திரங்களென்பது சூரியர்களுக்கும் மற்றக்கிரகங்கள் சுற்றியோடுகின்ற மத்திய நிலைக்கும் நிலையான நக்ஷத்திரங்களென்று பெயரென்பதும் இவர் கோட்பாடு.

15. ஆதித்திய மண்டலமென்பது சூரியனுக்கும் அவனைச் சுற்றிவரும் கிரகங்களுக்கும் பெயர். சூரியனைச் சுற்றியோடும் கிரகங்கள் சுயவொளியாற் பிரகாசிப்பதில்லை. பிரதிபிம்பமாகிய ஒளியாலே பிரகாசிக்கின்றன. இவைகளுக்குப் பிரதிபிம்பக்கிரகங்களென்று பெயர். ஆகாய மண்டலத்தில் மின்னிக்கொண்டும் அசைவற்றுமிருக்கின்ற பல உருக்கள் தங்கள்தங்கள் ஒளியாலே பிரகாசிக்கின்றன. இவைகளுக்கு நிலையாயுள்ளநக்ஷத்திரங்களென்று பெயர். நிலையான நக்ஷத்திரங்களைக்காட்டிலும் கிரகங்களுக்குப் பிரகாசம் இவ்வாறு அதிகமேயாம். ஆனால் மற்றைய சாதாரண நக்ஷத்திரங்கள் நிலையான நக்ஷத்திரங்களைக்காட்டிலும் அதிகப் பிரகாசமுள்ளவைகள். நாம் வாழும் இந்த மண்ணுலகத்தைப் போலவே கிரகங்களெல்லாம் வெவ்வேறுலகங்களாம். நிலையான நக்ஷத்திரங்களெல்லாம் சூரியர்களென்று எண்ணப்படுகின்றன. இவைகள் ஆதித்தியமண்டலத்தோடு சம்பந்தமுடையனவாம். பெரியவடிவமுள்ள வால்நக்ஷத்திரங்கள் ஆகாயமண்டலத்திருப்பினும் அவைகளின்விவரம் ஒன்றும் இன்னும் நமக்குப்புலப்படவில்லை.

16. ஆதித்தியமண்டலங்களின் நிலையை நாம் ஒரு படிகத்தின் மூலமாய்ப்பார்த்தால் ஒன்றும் விளங்காது. வானமண்டலத்திலுள்ள உருக்களின் வடிவத்தையும்தூரத்தையும் நிதானித்தறிய 'எர்ஷல்' என்பவர் ஒருபாயவழி காட்டியிருக்கின்றனர். அஃதாவது:—

சூரியனை 2-அடி சுற்றளவுள்ள ஒரு கோளமாக வைத்துக்கொள்வோம்; அக்கோளத்திலிருந்து 164 அடிதூரத்தில் ஒருகடுகை வைத்தால் புதனுடைய வடிவமும் தூரமும் தெரியும். சூரியகோளத்திலிருந்து 214 அடிதூரத்தில் ஒரு பட்டாணிக்கடலையை வைத்தால் வெள்ளி அல்லது சுக்கிரனுடைய வடிவமும் தூரமும் புலப்படும். இப்படியே சூரியனிலிருந்து 430 அடி தூரத்தில் மற்றொருபட்டாணிக்கடலையை வைத்தால் பூமியினுடைய வடிவமும் தூரமும் தோன்றும். இப்படியே மத்தியிலிருந்து 654 அடிதூரத்தில் ஒருகுண்டூசியின் அடி

யளவுள்ளதொன்றை வைத்தால் செவ்வாயின் வடிவமும் தூரமும் காணப்படும். சூரியனிலிருந்து 1100-அடிதூரத்தில் 80 சிறியமணல்களை வைத்தால் வேறு பல சிறிய கிரகங்களின் வடிவமும் தூரமும் வெளியாகும். சூரியனிலிருந்து அரைமைல் தூரத்தில் நடுத்தரமான ஒரு கிச்சிலிப்பழத்தை வைத்தால் வியாழன் அல்லது குருவின் வடிவமும் தூரமும் அறியப்படும். கொஞ்சம் சிறியதொரு கிச்சிலிப்பழத்தை ஒருமைல் தூரத்தை 5-பாகம்செய்து 4-வது பாகத்தில் வைத்தால் சனிக்கிரகத்தின் தூரமும் வடிவும் பிரகாசமாம். சூரியனுக்கு ஒன்றரைமைல் தூரத்தில் ஒரு கொட்டைப்பாக்கை வைத்தால் 'யூரானிஸ்' எனுங்கிரகத்தின் வடிவமும் தூரமும் காணலாகும். கொஞ்சம் பெரிய ஒரு கொட்டைப்பாக்கை மத்தியிலிருந்து $2\frac{1}{2}$-மைல்தூரத்தில் வைத்தால் 'நெப்தியூன்' எனும் கிரகத்தின் வடிவத்தையும் தூரத்தையும் நிதானித்தறியலாம். குண்டூசியின் அடியென்பதை ஒரு கடுகென வைத்துக்கொள்க. இவ்வாறாக இராகு கேதுக்களொழிந்த மற்றக்கிரகங்களின் வடிவமும் தூரமும் புலப்படுவதன்றிப் பூமிக்குத் தூரத்திலும் சமீபத்திலும் இருக்கும் கிரகங்களிவையென்பதும் புலப்பட்டது காண்க.

(இன்னும் வரும்:)

தி. வேங்கடராம ஐயங்கார்.
தமிழ்த் தலைமைப்பண்டிதர்,
சென்தோம் காலேஜ், சென்னை

உ

திருவெள்ளறைச்சாசனங்கள்.

(கக௱௱-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[No. II].—(மேற்கூறிய சாசனத்திற்கு வடக்கில்)

1. ஸ்வஸ்திஸ்ரீகொவிராசகெசரிபன்மற்கு யா -
2. ண்டு ௩ ன்றுவது திருவெள் ளறைதிருவானைக்-

*

3. கற்பேரு [மாந] டிகளுச்ச[ம்] பொது அமுது செய்-
4. யும் பொது வெதம [வ*] ல்லாரொருபிராமண-
5. ன் உத்தமக்ஷத்ரத்துஊட்டுவிதாகஇவூர்
6. ச்சாத்துவ[ா]ய் காஞ்சந்தாமொதிரன் இவூர்-
7. க்கல்லால் வச்சபொன் எழுபதின் கழஞ்-
8. சு இப்பொன்னின் பலிசையால் ஊட்டுவதா-
9. னபடி தாலமொன்று வட்டிலொன்று பத்தெட்-
10. டுருத்தல் பழவரிசி நாடுரி கும்மாயமு[ள்]-
11. நெய் ஆழாக்கும் பழமிரண்டும் காய்க்க-
12. [றி]புளிங்கறி தயிர்நாழி பொரிக்கறி காமி[லை]-
13. பாக்கிரண்டு இப்பரிசு சந்திராதித்தவற் ஊ-
14. ட்டுவொம[ா] நொமுலபறி டையொமி ர-
15. க்ஷை

[No. III.]—(2வது சாதனத்திற்கு வடக்கில்).

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை[ரகொ]ண்ட கொப்பரகெ-
2. சரிபன்மற்கு யாண்[டி]ருபத்தொன்றுவது இவ்-
3. வாண்டு திருவெள்ளறைத் திருவானைக்கல் பெரு-
4. மா(ன்)னடிக(ள்)ளுக்கு திருவெள்ளறை அங்கே
5. வாதி[கி]கன் திருவடி க[ா or ள்] வன்திருநொன்தா-
6. விளக்கு இரவும் பகலும் எரிபதாககுடுத்-
7. த பொன் இருபத்திருகழஞ்சு ச(ந்)த்ராதித்
8. வர் முல பருடையயார் ரக்ஷை||

[No. IV.]—(மூன்ருவது சாசனத்தின் கீழ் அதே கல்லில்.)

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கொப்பர கெசரிப-
2. ன்மக்கு யாண்டு பதினலாவது இவ்வாண்டு
3. திருவெள்ளறைத்திருவானைக்கல்ப் பெருமாநடி-
4. களுக்கு நாங்கூர் நாட்டு தெவதாநம் நாங்கூர் காச்-
5. சாணன் தத்தன் சந்திரசெகரந் வைச்சநொ-

6. ந்தாவிளக்கு இரவும் பகலும் எரிவதாக குடுத்-
7. த பொன் முப்பதிந் கழஞ்சு ச(ந்)த்ராதித்யவத்ஸ
8. ஹெயாரா(க்ஷ)

[No. V.]—(அகிலாண்டநாயகி கோவிலின் வடபாகத்தில்.)

1. [ஸ்வஸ்தி]ஸ்ரீ மதிரைகொண்ட கொப்பர
2. [கெசரி] வன்மக்கு யாண்டு ௩௰ தாவது திரு-
3. [வெள்ள] றை திருவானைக்கல் பெருமானடி-
4. [களுக்கு இ]வ்வூர் சாத்துவாய் குமரவஞ்செ[ச]ந்-
5. [தன்...அ]முதுக்கு வைச்ச பொன் ௩௰-
6. ....கழஞ்சு பொன்னிட்டால் வந்-
7. [த]......... ரநாரண [முவெ]-
8. ....

Beginning of each line built in.

[No. VI.] (4-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸ்வஸ்திஸ்ரீமதிரை கொண்ட கொபர கெசரிப-
2. ந்மற்க்கு யாண்டு முப்ப[த்*]து ஆறுவது திருவெ-
3. ள்ளறை திருவானைக்கல்ப் பெருமானடிகளுக்கு இ-
4. வ்வூர் ஐயப்யஸங்கரணத்தான் திருத்தெயம் வைத்-
5. த திருநொந்தா விளக்கு சந்த்ராதித்யவஷெரியவைத்[த்*] திருநொ-
6. ந்தாவிளக்கு [இ]தற்க[கு*] குடுத்த பொன் திருவெள்ள றைக்கல் [லால்]
7. கழஞ்சு பொத்த[ன்] முப்பதின் கழஞ்சுபொன் குடுத்தநி-
8. லை விளக்கு ஒன்றும் இப்பொன்னில் பொகம் கொண்டு
9. திருநொந்த விளக்கெரிப்பொம் ஆநொம் திருவெள்ளறை மூலபரி-
10. டையொம் ரக்ஷ

[No. VII.]—(2-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஸிஸ்ரீ மதிரை கொண்ட கோபர கேசரி
   வ த
2. பருமர்க்கு யாண்டு ௰௩ ஆவது திருவா–
3. [னை]ய்கல் பெருமா[ா*]னடிகளுக்கு திரு[வெ]வ-
4. ள்ளறைய் ச்சாதுவாய் காடன்காரிதி-
5. ருநொந்தா விளக்கிரவும் பகலும் எரிய-
6. தற்க்கு வைத்த பொன் முப்பதின் கழஞ்சுசங்-
7. திரா[தி*] த்தவரை மூலபரிடையாஸிரக்ஷை [பி]ராகடம்

[No. VIII.]—(மூன்றும் சாசனத்துக்கு வடக்கில்.)

1. ஸஸிஸ்ரீ மதிரை கெ[ா]......‡
   வ த
2. ண்டு உ௰௩ ஆவது இவ்வூர்.........
3. த்திருமால் கோவன் மன்.........
4. வெள்ளறைத் திருவா[னை].........
5. ஜீத்ருவத் ஒருநொந்தாவி.........
6. தொண்ணூறு இது மூலப[ரு].........

[No. IX.]—(8-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஸிஸ்ரீகோவிராச கேசரி பன்மற்க்கு [யாண்]-
   வ த
2. டு ௩ ஆவது திருவெள்ளறை திருவானை [க்கல்]
3. பெருமாநடி[க*]ள் உச[ச*]ம் பொது அமுதுசெயும்
   [பொது*]
4. வேதம் வல்லா[ன்*] ஒருபிராஹ்மணனை [ஊட்*]-
5. டுவிதாக உறையூர் மணிகிராமத்து நாரா[யணன்*]-
6. நாச்சன் இவ்வூர் கல்லா[ல்*] வ[ச*]சபொன் அஞ்[பதி*]
7. ன் கழஞ்சு பொன்நின் பலிசையினுல் தி.........
8. மாககிரமத்து ஊட்டுவதானபடி பழவரிசிநா [டுரி*]-
9. யும் பருப்பு உ[ழ*]க்கரையும் வாழைப்பழ[ம்*] இர
   [ண்*]டு[ம்] [நெ]-
10. ய் ஒருபிடியும் காய்கறிப்புளிங்கறியுஃப்பெ[ாரிக்*]-

---

‡ ஒவ்வொரு வரியின் முடிவிலும் கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது.

11. கறியும் தயிர்நாழி அடைக்காய் நாலும் [இ] [ப்ப*]-
12. டிசந்திராதித்தவற் ஊட்டுவொமா[னொம்*]-
13. திருவானைக்கல் வாரியரொம் தாலநிறை......
14. பது வ[ட்*]டில் பதிங்பலம் முலபாரி[டை*]-
15. யார் இரகூ

Ends of each line built in.

[No. X.]—(9-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஷி ஹாரவ வ தி ....
2. ஞுவஹோராஜ ....
3. ந்திவஹெற்கூ[யா]....................
4. ஸிஉ.டயாரவ்ரு[ஷ்]
5. வன் வெந்தன்...........
6. ன சாத்தன்செ.........
7. திருமருமான் பெருெ.........
8. வா[நு] தொண்மறவ........
9. வெளாளரை யார்தங்.........
10. க்கான உறுதியான [ட or ற]......
11. வரு நதெயத்†துக.........
12. ததன்† ம[ற்ற]வை..........
13. பெருங்காவிதிச்ெ......

X-வது சாசனத்தின்கீழ் பரகேசரி காலத்துச் சாசனம் ஒன்றிருக்கிறது.

[No. XI.]—(1-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸஷிஸ்ரீ மதிரைகொ[ண்டகொப]பரகெசரிபன்- வ தி
2. மற்கு யாண்டு முப்பதாவது திருவெள்ளறை திருவா-
3. னைகற் பெருமா நடிகளுக்குச் சம்பொதை திருவமி-
4. துக்கு இவூர்ச்சாத்துவாய் செந்தன் மாதெவன்ம-
5. ணவாட்டி குவாவன் செந்திவச்ச பொந்திரு [ெ]வள்ள [ை]ற

† புள்ளிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

6. கல்லாற் முப்பது பழியு...ள இரவும் பகலும் எ-
7. ரியதிருநொந்தா விளக்கினுக்கு குடுத்தபொ-
8. ன்முப்பது [ெ]தபகுளத்துக்கு குடுத்தபொ-
9. ங்பத்து எற்றி (?) எழுபதின்கழஞ்சுபொன் [க?]-
10. [ண்?]டு இப்படி செய்விப் பொமானொம்ச-
11. ந்திராதித்தவரை மூலபருடை யாரிரக்ஷை

[No. XII.]—(அர்த்தமண்டபத்தின் மேற்சுவரில்.)

1. ஸ்வஸ்திஸ்ரீமதிரை கொண்ட கொப்பர கெஸரிவர்மற்கு யாண்டு ௩௰௬ ஆவது திருவெள்ளறைத் திருவானை-
2. க்கல்லில் ஸட்டாரகர் உச்சம்பொது அமு[து*] செயும்பொது வெதமுவல்லாரிருவர் ப்ராஹ்மணரை ஊட்டுவதற்கு இவூர் ......
3. காச்சுவன் கெசுவந்துர்ககன் இவூர்க்கல்லால் கழஞ்சுபொத்தது(?) ராசயடு நூற்று நாற்பதின் கழஞ்சு பொன்னின் ......
4. பலிசையால் கரணத்தால் மூன்னாழி பழவரிசியு முழக்குப்பருப்பும் காய்க்கறியும் புளிங்கறியும் பொரிக்கறியும் இவிரண்டு வாழை-
5. ப்பழமும் தயிர் இருநாழியும் நெயாழாக்குமாக இப்படியூட்டுவொமானொம் தேவர்க[ந்] மிகளொமிது மூலபரிடையார் ரக்ஷை காமிலெ எட்டு
6. எழுநாழிபால்
7. தாலமிரண்டு[வ]
8. ட்டிலிரண்டுமொ[ய்]-
9. ளுழி..

[No. XIII.]—(12-வது சாசனத்தின் கீழ்.)

1. ஸ்வஸ்திஸ்ரீ கொராச கேசரிவற்மர்க்கு யாண்டு உ ரண்டாவது திருவெள்ளறை சங்கரபாடி பருதங் ஆச்சங் திருவானைக்கல்லில் ஸடடார்கற்க்குவை [த*] தநொ

[ந்*] தாவிளக்கு ஒ—க—ந்று இதுக்கு வைத்த

2. பொன் உயிடு இருபத்து ஐங்கழைஞ்சு இதுமுதல் நிற்க்க

ப்பலிசையால்வநரீ[தூ] வற் ஃரிப்பொம்மா னொ
த

[மி*] வலூர் முலபரு [டையொம்*]

End built in.

ச. ம. நடேசசாஸ்திரி.

உ

பௌத்தமத விசாரணை.

புத்தநிர்வாணம்.

புத்தமததத்துவ விஷயம், இந்நூலில் வேண்டுமட்டும் பூர்வபட்சம் பண்ணியிருத்தலின், அதனைப்பற்றி ஈண்டு விஸ்தரிக்கவேண்டியதின்று. ஆயினும் புத்தமதஸ்தரின் பெரும்பேறாகிய நிர்வாணத்தைப்பற்றி இரண்டொருமொழி கூறுவோம். பண்டிதர் பலரும் பலவாய் இதைப்பற்றிப் பகர்ந்திருக்கின்றனர். ஒருவரோடொருவர் மாறுபட்டு மாக்ஸ்மூலர் ரைஸ்டேவிட்ஸ் பண்டிதர் இருவரும் நிர்வாணம் என்பது ஆன்மாவின்கேட்டை உணர்த்துவதின்று என்றும், பரமரகசியமான கர்மவிடுப்பின்படி பிறப்புக்குக்காரணமாகிய உள்ளம் உணர்வின்கண்ணுள்ள கொடிய அவாவின்பற்றை யறக்கெடுத்தல் என்பதே அதன் உண்மை என்றும் பகரநிற்றார்கள். இவ்வாறு உரைத்தது உண்மையேயாகுமாயினும் புத்தமதக் கோட்பாட்டின்படி, ஆன்மா உண்டென்பதும், வீடடைந்தபின்னர் அதுநிலைபெறுமாறும் உண்மையாகுமோவென்று யாம் கேட்கவிடந்தரவேண்டும். சினர்களுக்குள் பின் விளங்கியவாறு இந்த உண்மையைச் சுத்த பௌதிகமாக்கி இப்பொன்னுலகங்களைப்பற்றிப்போற்றியது உண்டு. எனினும், புத்தமதக் கோட்பாட்டின்படி ஆன்மா உண்டோ இல்லையோ என்னும்வினாவுக்கு விடையெழுந்தில. புத்தர் ஆன்மா உண்டென்றும் இல்லையென்றும் உறுதிகூறவில்லை;

அவர் பின்றொடர்ந்தாரும் ஆன்மாவில்லை ஆண்டவனில்லை எனக்கூறி ளுர்களென்பதும் எமது துணிவு.

புத்தரின்கருத்து அவாவையும் பிறப்பிறப்பின் துன்பங்களையும் அறுத்தலுமே போதும், மற்றயவிஷயங்களை விசாரிக்கவேண்டுவதில்லை யென்பன. இந்துமதத்திற்கூறிய முன்னின்ற விஷயம் கவனிக்கவேயில்லை. முன்னர் யாம் காட்டுமாறு ஹிந்துமதத்திற் கூறிய ஒருபக்கத்தையே எடுத்துக்காட்டி அதிலுள்ள மறுபக்கத்தையும் மறந்தொழிந்தனர். நிர்வாணம் என்னும் மொழிக்கு மேலே யெழுதியபொருள் இந்துமதத்துள்ள பொருளே. இம்மொழி கீதையில் ஐந்தாம் அதிகாரம் 24-முதல் 26 சுலோகங்களில் வருகிறது. சைவசம்ஸ்காரங்களில் நிர்வாணதீக்ஷை பரமரகசியமாகும். இம்மொழிக்கு ஓடலற்ற என்பது பதப்பொருள். வாயு, வாகினி என்னும் மொழிகள்போல ஓடலற்றதே அசலம், ஸ்திரம் சிந்தைதெளிதல் என்னும் பொருள்களில் விளங்கும். இச்சிந்தைதெளிதலும் அவாவினையகற்றுவதால் உண்டாவதால் நிர்வாணம் என்பது கெடுதல் அழிதல் என்னும் பொருளைத்தர்கது. (நிர்வாணம். நிர்வாணி உடையின்மை, யில்லாதவன். அருகனை நிர்வாணியாக்கியதும் இதன்கருத்தே) ஆகவும் நிர்வாணப், மோக்ஷப், முக்தி, வீடு என்னும் மொழிகளெல்லாம், ஏதோ ஒன்றினைவிடுத்தல், கெடுத்தல் எனப்பொருள் கொள்ளும். ஆயின் எதனை அழித்தல் கெடுத்தல்வேண்டும்? அதுவே, நம்மின் அகங்காரமும், யானேதென்னும் அகப்பற்று புறப்பற்றும் விருப்பும் வெறுப்புமாகிய அவா. அதுவே பிறப்பின்வித்தும் துன்பத்தின்காரணமுமாகும். இந்தஆணவமாகியமலம்நசிக்கும்வரை பிறப்பிறப்பும் துன்பமும்துயரமும் நீங்கா; ஆயின் இவ்வாணவமோ உயிரின் உள்ளுறை ஆன்மா அன்று. இவ்வான்மாவும் என்றும் அழியவும் படாதது, என்றும் அழியவுமில்லை. இஃது என்றும் அருட்பெருஞ்சோதியின் மூழ்கி ஆநந்தத்தழுந்தி, மேல் நிலையத்தில் அமர்ந்தும், தன்னையுணராதும் உள்ளதே. ஞானிகளும் முக்தர்களும் தேகத்துடன் நிற்கினும் உலகைத்துறந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் ஆநந்தத்தை அனுபவிப்பினும், அனுபவஞானம் கிடையாது. உணர்வுக்கும், உணர்கின்றேன் என்ற உணர்வுக்கும், உள்ளவேற்றுமையை உற்றுப்பார்க்கில் அதனுண்மை புலப்படும். பரமான்மா

வுடன் ஒன்றானபோது துவைதம் அன்று, முக்தியில் ஆன்மா அறிவு மாகில், துவைதம் விளங்கும். கேவலநிலையில் அறிவானும் பொருளும் ஒன்றாகி, பொருள் உண்மையாயினும், அது, தனித்துத்தான் உளதென்ற ஞானம் தலைப்படாது. புத்தர் இப்பரமரகசியங்களிற் புகவில்லை. அல்லது சிலர் கூறுவதுபோல், இம்முத்துக்களைப்பன்றிகளுக்கு முன்போகட இயலவில்லை. என்றும் தீயது விளையவே விளைந்தது. அவர் வெளியாகச் சொல்லிய ஒரு பக்கம் மட்டே ஓர் மதமாகி அநேக கோடி ஜனங்களை மயக்கிக் கொண்டிருக்கிறது. அவ்வப்பொழுது நன்மை பயப்பதாயிருந்தபோதிலும் ஒரு பட்சமாகிய உண்மையை உறுதிகூறுவதில் எப்போதும் இழுக்குண்டு. நிர்வாணம் முக்தி வீடென்ற மொழிப்பிரயோகங்களால் உய்தற்கேது, முக்தியமானது அவா அறுப்பதேயென, ஹிந்து நம்புகின்றான். புத்தன் போல் அத்துடன் நிற்காமல், பாசங் கழன்ற ஆன்மா பதியிற் கலந்து நித்யானந்தத்தை யநுபவிப்பதையும் பகர்கின்றான். பாசக்ஷயமும் பதிஞானமும் காரண காரிய நிகழ்ச்சிபோ லொன்றாயினும் இவ்விரண்டும் வேறு வேறு நிலையினையுடையன. பதிஞானம் சிற்றறிவுடைய மனிதன் முயற்சியினாலன்றி பரமேசுவரனது பேரருளினால் கிடைக்கற்பாலது. இதுவும் அரன் பணிநின்று சுயமாக அன்பு பூண்டு ஒழுகலானன்றி கிடைக்கற்பாலதன்று. இவ்விரண்டு அநுபவங்களின் தாரதம்மியங்களை குருடன் திருஷ்டாந்தத்தால் வேறிடங்களில் விளக்கிக்காட்டி யிருக்கின்றோம். குருடன், மருத்துவன் சிகிற்சையால் கண்ணை மறைத்த படலம் நீங்கிய பின் அக்குற்றத்தினின்றும் நீங்குகின்றான். ஆயின் படலம் நீங்குவது மாத்திரம் அவன் கோரிக்கையாகுமோ; புத்தர் பேறும் அம்மட்டே நிற்கும். படலம் நீங்கிக் கண்ணைப்பெறுவன் ஆனால், இருளிலேயே இருக்க வேண்டும். இது நன்மையாகாது. என்றும்படலநீக்கம் ஒருவித திருப்தியுண்டு பண்ணவுங்கூடும். ஆனால் இவ்வித பலனை முன்னிட்டுஒருவன் அதிக தூரம் செல்லமாட்டான். படலம் நீங்கியபின், ஒளியைப்பார்க்கக்கூடாது, இருட்டறையில் என்று மிருக்கவேணுமென மருத்துவன் பகருவானானால், நல்ல மருத்துவனை யடையவும் அவனுக்கு பெரும் பொருள் கொடுக்கவும் சிகிற்சையால் துன்புறவும் எவன் சம்மதிப்பான். ஏன், படலத்துடனிருப்பது இதற்குமே

லான தாகுமே. பௌத்தத்திலும் பேர்விளங்கிய நம்மதங்களுள் சிலவற்றினும், இவ்வித அசந்தர்ப்பத்திலேயே விழ்த்துகின்றது. இவர்களிற் சிலர் முக்தியில் ஒன்றாகும் சமயம், ஆன்மா அறக்கெடுகின்றதென்றும், இன்னும் சிலர் முக்தியில் அனுபவமில்லையெனவும் கூறுகின்றனர். மெய்கண்டதேவரால், சிவஞானபோதப்பதினொன்றாம் சூத்திரவார்த்திகத்தில் இக்கூற்றுகளை பூர்வபட்சப்படுத்தியிருத்தலுங்காண்க. இதனாலே 11-ம் சூத்திரத்துக்கும், மேற்கூறிய 10ம்-சூத்திரத்துக்கும் உள்ளமுறையும் ஏற்படும். 10-ம் சூத்திரத்தில் "இறைபணி நிற்க, மலமாயை தன்னொடும் வல்வினையின்றே" எனப்பாசக்ஷயம், பந்த நிவர்த்தி, பற்றுக்கேட்டைப் பற்றிப் பிரசங்கித்தது. 11-ம் சூத்திரத்தில், "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" எனப் பதிஞானம், பரானுபவத்தை குறித்தது. மகாபாரத ஆராய்ச்சியில் பிரசித்திபெற்ற டால்மன்பண்டிதரும் தம், 'நிர்வாணம்' என்னும் நூலில், நிர்வாணம் என்னும் பொருள் உண்மை, புத்தருக்கு முற்பட்டதென்றும், பழைய வேதாந்தத்தினின்றாவது சாங்கியத்தினின்றாவது பிறந்ததல்ல வென்றும், இவைகளுக்கும் பழமையான இந்துமதத்திற் கிடப்பவை யென்றும், அதன் கருத்து பிரம்ம நிர்வாணம் பரமான்மாவிற் கலத்தல் என்றும், இந்த உண்மை மகாபாரதத்திலும் கீதையிலும் பரக்கக் காணலா மென்றும் பகர்கின்றனர். இது சித்தாந்திக்குப் புதிதன்று.

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."

"நாமொழிந்து சிவமானவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."

என்றுமன்றோ அவன்பாடிப் பரவசப்படுகின்றான். இப்பிரமாணங்கள் ஸ்ரீமன் மணிவாசகப்பிரபுவின் திருவாசகத்திலுள்ளன. இன்னுமொரு பிரமாணத்தையும் ஈங்கு வரைவோம்.

இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின் றன்மை நினைப்பறநினைந்தே
நீயலாற்பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றும்
திருப்பெருந்துறையுறை சிவனே

யொன்றுநீயல்லை யன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே.

இதிலடங்கிய உபமான உபமேயங்களைப் பின்வருமாறு விரிக்கலாம். ஞாயிறு கீழ்த்திசையின் கோடியில் உதித்து உச்சியில், அதன்பூர்ண ப்பிரகாசம் பெறுகின்றது. ஒருவனை அவனுடைய நிழலுடன் காலைமுதல் மதியம்வரை பார்ப்போம். உதயகாலத்தில் அவன்நிழல் மிகவும் நீடித்திருக்கின்றது. சூரியன் உயர எழஎழ அவன்நிழல் குறுகிக்குறுகி, உச்சியில் முற்றும் கெடுகின்றது. நாம் நினைப்பது சூரியன் நம்மைநோக்கி வருவதாக. உண்மையில் நாமே அவனை எதிர்கொண்டு செல்கின்றோம். ஆயின் அவன் நம்மைநோக்கிச் செல்வதும் உண்மையே. ஏனெனின் அச்சூரியன் வலியினாலன்றி, பூமியும் அவனைச்சுற்றிச் செல்லா. இதில், சூரியன் பதியும், மனிதன் பசுவும், அவன்நிழல் ஆணவம், அகங்காரம், அஞ்ஞானம், பாவம் எனக்கொள்ளவேண்டும். ஆன்மா கடவுளைநோக்கி "நீயல்லாற்பிறிது மற்றின்மை நினைப்பறநினைந்து சென்றுநெருங்கவும் ('சென்றுசென்று') அவன் பாசமாகிய நிழல்வரவரத் 'தேய்ந்து தேய்ந்தும்" கடையில் அப்பரஒளிதன்னை முற்றிலும் கவர்ந்து விழுங்குதலால் நான் என்பதும் கெட்டு மீண்டுநிற்பது திருப்பெருந்துறைச் சிவன் ஒருவனே யாவன்.

"ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னைவிழுங்கிவெறுந்
தானாகிநின்றது தற்பரமே."

அதன்பேருக்கியைந்த கந்தர்அநுபூதி என்னும்அற்புத ஆனந்தநூலில் ஸ்ரீ அருணகிரியார் இந்த உண்மைகளை இன்னும் பலவிதமாய்க் காட்டியிருக்கின்றனர்.

"எல்லாமற என்னை இழந்த நலம்"

"குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்றுலை வோடுரை சிந்தையுமற்று
அறிவற்று அறியாமையு மற்றதுவே"

"அறிவொன்றறநின்றறிவாரறிவில்
பிறிவொன்றறநின்றபிரானலையோ
செறிவொன்றறவந்திருளேசிதைய
வெறிவென்றவரோடுறும்வேலவனே"

"ஆசாநிகளம்துகளாயினபின்
பேசாஅநுபூதிபிறந்ததுவே"

கடைஇவ்விரண்டடிகளும் பூர்வபட்சசித்தாந்தங்களின் பாகுபாடுகளை செவ்வனே விளக்குகின்றன. புத்தன் "ஆசாநிகளம்துகள் ஆக்கு" என்று மட்டுஞ்சொல்லிநிற்பன். சித்தாந்தி, அதன்மட்டுநில்லாது "பேசா அநுபூதி பிறந்ததென்றும்" பகர்வன். இத்துடன், தேவர் குறளினின்று சில மேற்கோள்களை சொற்பொருள்களிலும் ஒத்துப்பார்க்கலாம், அவரைச்சிலர் புத்தராகவும் சைனராகவும் எண்ணுகின்றாராகலின். எனினும் அவர் ஜீவன் ஈசுவரன் வீட்டுலகம் உண்டென்று மதித்தார் என்பதற்கு ஐயம் கிடையாது. அதனை ரகசியமாகவும் மூடிவைக்கவில்லை. கௌதமருடன், "அவாவென்ப எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவா அப்பிறப்பீனும்வித்து" எனஅருளிசெய்து "பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்" என்று பின்னுங்காட்டி, அப்பற்றறுவதற்கு முக்கியசாதனம் பரமேசுவரனது பாதாரவிந்தங்களிற் பத்திபண்ணுதலே என்று சித்தாந்தம்செய்தார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு."

இருள் ஒளி என்னும் உபமான வாயிலாக, பாசநீக்கத்தையும் பதியிற்கலத்தலையும் பின்வரும் குறளாலருளிச்செய்கின்றார்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறுகாட்சியவர்க்கு."

இருள்நீக்கம், மருள்நீக்கம், ஒருபக்கமாகவும், மாசறுகாட்சி இன்பம்பயத்தல் மறுபக்கமாதலும் கூர்ந்துகவனிக்கற்பாலது. இக்கருத்தினையே,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற திருகுறள்களும், முதலதிகாரத்தில்உள்ள மற்றைக்குறள்களும் விளக்குகின்றன.

இனி கீதையினை எடுத்து, 4, 5 அதிகாரங்களைப்படிப்போமானால், இவ்வுண்மைகளே சொற்சொல்லாய் மீண்டும் காணப்படுகின்றன. நம்பிரபுக்களில் ஒருவர் கூறியபடி, கீதையைக்கடைமுதலாகக்கொண்டு மாறிப்படிக்கவேண்டும். அப்பொழுது 4, 5 அதிகாரங்களுக்குள்ள சம்பந்தம் விளங்கும். 5-ம் அதிகாரம் கர்மசந்நியாச யோகத்தைப்பற்றியும் 4-ம் அதிகாரம் ஞானயோகத்தைப்பற்றியும், தமிழ்மேற்கோள்களிலுள்ள அதேசொற்களாலும் உவமானங்களாலும் பாசக்ஷப பதிஞானஉண்மைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

"பற்றைவிட்டு, என்னிடம் எல்லாக் கர்மங்களையும் அர்ப்பணஞ்செய்து (பணியாக்கி) நிற்கின்றானே அவனைப்பாவம்பற்றா, தாமரையிற்றுளிபோல்." (V. 10).

"வினைப்பயனைவிட்டு, இருவினையொப்பு (சாந்தம்) அடைந்தவன் பரமசாந்தத்தைபடைகிறான். அவ்வொப்பு அடையாதவர்கள், அவா எழுப்ப வினைப்பயன் நுகர்ந்து கட்டுப்படுகிறார்கள்." கடவுள் அசேதனப்பிரபஞ்சத்துக்கு உபாதானகர்த்தாவென்றும், இருவினைக்குங் காரணம் அவனேயென்றும் மயங்கிக்கூறும் அவலமார்க்கத்தை 14, 15-வது செய்யுட்களால் நிராகரிக்கிறார். இதைவிடப்பெருந்தப்புக் கிடையாது. பிரகிருதி பிரதானம் மாயை என்று சொல்லப்பட்டது, தனுகரணபுவன போகமாகிய சடப்பிரபஞ்சத்தின் முதற்காரணமாகும். உண்மையில் பிரகாசமுள்ள ஆன்மாவை ஆசை அஞ்ஞானம் ஆணவமலமென்னும் அழுக்குமூடிநிற்கின்றது. எப்படியெனில் பளிங்கை அழுக்குப்போலவும், நெருப்பைப் புகைபோலவும் கருவைப் பைபோலவும் உண்மையில்பதிஞானத்தால் எவனுக்கு அஞ்ஞானம் அடிபட்டுப்போகிறதோ, அவனுக்கு பரமேசுவரன் சோதிபிரகாசமாயெழுகின்ற ஞாயிறுபோன்று விளங்குகின்றான், "தன்னை (கடவுளை) நம்பித் தன்னைநினைந்து தன்னில் ஈடு

பட்டு தன்னில் எவர்கள் அழுந்துகின்றார்களோ, அவர்கள் பாபம் ஞானத்தால் பட்டுப்போய், என்றும் மீளா இன்பத்தைப் பெறுகிறார்கள்." (V. 16, 17) "வெளிப்பற்றுகளில் எவன் பற்றறநின்றானோ, அவன் பரமானந்தத்தையடைகிறான்." (V. 61)

"பாவம் கழன்று, பேதமற்று, சிந்தைதெளிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும், ரிஷிகள் பிரம்மநிர்வாணத்தையடைகிறார்கள்" (V. 25) "என்னையே யக்யம் தபசுகளின் பலனை நுகர்வானும் கொடுப்பானுமாகவும், எல்லாவுலகங்களுக்கும் மகேசுவரனாகவும் எல்லாவுயிர்களுக்கும் மங்களம்செய்பவனாகவும் எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் சாந்திநிர்வாணத்தையடைகிறார்கள்."(V. 29) கீதைக்கு விருத்தி செய்தோர்களும், பிர்ம்ம நிர்வாணத்துக்கு, பிர்ம்மலயம், பிர்ம்மானந்தம், மோக்ஷமென பொருள்காட்டியிருக்கின்றனர். ஆக பௌத்ததந்திரநிர்வாணம் இவ்விருபக்கமாய் யாம்மேல் விளக்கியுள்ள அத்துவித சித்தாந்தம் ஆகுமோ? இவ்விரண்டும் ஒன்றுசேருவதெப்படி? ஆனால் இருவரும் ஒரு நெறியிற்சென்று கேடயந்தாங்கிய வீரக்கல்லினிடம் சேர்ந்ததுண்டு. ஆனால் ஒருவன் ஒளிக்குப்புறம்பாய் இருள்மூடப்பட்ட கேடயத்தின் பின்பக்கத்தையே பார்த்துக் கருமையென்றேசாதிக்கின்றான். முன்புறம்போய் அருணன் கிரணம்படத் தகதகவென்று விளங்கும் மற்றப்பக்கத்தையும் பார்க்கமாட்டேனென்றும் சொல்லுகின்றான். அப்படிப்பார்க்கினன்றோ, அப்பேசரும் பிரகாசம் காணப்பெற்ற', பெற்றும் மீண்டு கண்ணிழந்து, மீண்டும் பிறப்பின் விழைவுருவண்ணம் மாளவும், சாலும். ஆகவும், நாம் உண்மையின்வழியே ஈடுபட்டு, எளிமையுடனும் தாழ்மையுடனும், புத்தமதம் ஒருபக்கமாகையையும் இந்தமதம் அறிவிற் சிறியாராகிய சனங்களிடம் பரவவும் சரியான உணர்ச்சியின்மையால் அவர்கள் ஒழுக்கம் குணம் முதலியவைகளைக்கெடுக்க நேரிடுவதும் காரணமான அதன் குறைவை எடுத்துக்காட்டும்போது யாரும்மறுக்காத புத்ததர்மத்தின் அழகைப்பற்றி வர்ணிப்பதெற்றுக்கு? நிர்வாணமென்னும் பதத்துக்கு நாம் முன்னர் உள்ளமுணர்வின் பற்றின்கேடு என எழுதியது உண்மையென்போம். உள்ளமும் உணர்வுமே சாந்திஆனந்தத்தில் அழுந்துவது, உண்மையோ? உள்ளம் உணர்வைவிட மேலொருதத்துவங்களில்லையோ? ஆன்மா

பரமான்மா வென்பதொன்றில்லையோ? அல்லது இந்து மதப்படி ஆன்மா கடவுள் என்னும் பதார்த்தங்களுமே பிரமையோ? பகவான் சொல்லியமொழியே இன்னும் சான்றாகும். "உயர்ந்தோர் செய்ததைத் தாழ்ந்தோரும் செய்பவுற்றார் உயர்ந்தோர் குறிப்பின்படி தாழ்ந்தோரும் பற்றலாயினர்" (கீதை) உடை காலந்தோறும் மாறுபடுவதுபோல் அபிப்பிராயங்களும் மாறுபடும். புத்தமதம் தற்காலத்துக்கு ஏற்றதாகும். அதற்குமாறாக நடப்போனும், கோமாளியும், பயித்தியக்காரனுமாக எண்ணப்படுவன்.

ஜே. யெம். நல்லசாமி.

உ

புத்தகக் குறிப்பு.

அரிசமயதீபம் :—வைணவசமயாசிரியர்களாகிய ஆழ்வாராதிகள் சரித்திரத்தை, மணிப்பிரவாளநடையிற் பெரியோர்கள் எழுதிவைத்த நூல்கள் உலகில் வழங்குதலைப் பலர் அறிவாராயினும், சிறந்த தமிழ்க்கவிகளால் தமிழ்ப்பாக்களில் அத்திவ்விய சரித்திரங்கள் பலவாண்டுகட்குமுன்னர்ப் பாடப்பெற்றிருத்தல் பலரறியார்கள். இதன் காரணம் மறைந்துகிடந்த அதனை வெளியிடமுயன்றவர் இல்லாமையே. ஆழ்வாராதிகள் சரித்திரங்களைப் பிரபலவித்வான்கள் சிலர் வெவ்வேறு நூல்களாகப் பாடியிருக்கின்றனர். இவற்றுள்ளே சுருக்கமும் பொருட்பொலிவு சொற்செறிவுங்கொண்டு விளங்குவது 'அரிசமயதீபம்' என்பது. இதனை இயற்றிய வித்வசிகாமணி கீழைச்சடகோபதாசரென வழைக்கப்படுவர். இதனையியற்றியோர், தக்ககவியென்னற்குரிய இலக்கணமுழுதும் அமையப்பெற்றவரென அறியப்படுவதோடு, பரமபக்தியுடையவரென்பதையும், அவரது அழகிய நூல் விளக்குகின்றது. சிறந்தகவிவாணரும், பரமபாகவதருமான தாஸரவர்களுடைய பெருமையை ஈண்டெடுத்துரைப்பின் விரியுமாதலால், அதனை நிறுத்திக்கொண்டு, இந்நூற்பதிப்பைப்பற்றிச் சிறிது சொல்

வோம். இந்நூலை அச்சிட்டவர், ஆழ்வார்கள் சரித்திரங்களைத் தமிழ்ப்பாக்களிற்பாடிப் பலரியற்றிய நூல்களை ஆராய்ந்து இனிய முகவுரையொன்றெழுதியுள்ளார். அன்றியும் நூன்முழுதுக்கும் பொழிப்புரையொன்றும் எழுதப்பட்டுள்ளது. இஃது அந்நூலைப் பலரும் ஒருவாறு எளிதிற் படித்தறிதற்குப் பெருங்கருவியென்னத் தட்டில்லை. காகிதமும், அச்சும் நன்கமைந்துள்ளன. சுருங்கச் சொல்லின் நூற்பெருமைக்குத் தக்கவாறு அந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளதென்பதில் ஐயமில்லை. இந்நூலைப் பரிசோதித்தும் பொழிப்புரையிட்டும், தமிழுலகத்திற்குபகரித்தோர் ஸ்ரீமாந்-முத்துகிருஷ்ண நாயுடுகாரு, 19. சாமிபிள்ளைத் தெரு, சூளை, சென்னை. இவர்கட்குத் தமிழகமும், வைஷ்ணவாபிமானிகளும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

விதானமாலை மூலமும் உரையும்:—இத்தலைப்பெயரிய சோதிட கிரந்தமொன்று வரப்பெற்றேம். கடுவைகாவலன் நாராயணசுவாமிகளால் இயற்றப்பட்ட பழையதோர் சிறந்தகிரந்தமாக விளங்குகின்றது. கணிதஸ்கந்தம், சங்கிதாஸ்கந்தம், சாதகஸ்கந்தம் எனமூன்று பகுப்புடையது இந்நூல். அவற்றுள், இக்கிரந்தம் சாதகஸ்கந்தம் சங்கிதாஸ்கந்தம் என்னும் இரண்டையும் தொகுத்தும் விரித்துங்கூறுவது. சோதிடவிருப்புள்ள எவர்களும் எளிதினுணரும்வண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இக்கிரந்தம் இற்றைக்கு இருபது வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணம், காரை, இயற்றமிழாசிரியர் பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயரவர்களாலே வெளியிடப்பட்டது. இப்பொழுது சிலதிருத்தங்களுடன் அவர்புத்திரருளொருவரும், நம்சங்கவித்வான்களுள் ஒருவருமான, காரை. கா. சிவசிதம்பர ஐயரவர்களால் வெளியிடப்பட்டது. இக்கிரந்தம் சோதிடவிருப்புடையார்க்கு வேண்டப்படுமென்பது திண்ணம். நமது சங்கத்துக்கு ஷை ஐயரவர்கள் பத்துப்பிரதி யனுப்பி யுதவியமைக்கு நன்றி கூறுகின்றேம்.

பத்திராசிரியர்.